உ

கடவுள்துணை.

செந்தமிழ்.

தொகுதி-௩௪] ஈசுவரஹு ஆனிமீ [பகுதி-௮.

Vol. 34. June—July 1937. No. 8.

கம்பராமாயண சாரம்.

[௨௩௮-ஆம் பக்கத் தொடர்ச்சி.]

1. கடல்காண்படலம்.

[இராமன் கடலைக்கண்டதைக் கூறுவது.]

இராமன் கடலைக்காணல்.

[தென்கடற்கரையை அடைந்த வானரசேனையின் பாரத்தினால், பூமி சமநிலை இழக்க, மலை கடல் முதலியவை வடக்கேயுள்ளவை வானைநோக்கி உயருமென்றும் தெற்கேயுள்ளவை பாதாளத்தைநோக்கித் தாழுமென்றும் சொல்லும்படி அந்தச் சேனைப் பெருக்கம் இருந்தது. இராமன் அந்தச்சேனை சூழ்ந்துவரச் சென்று, கரையோரத்தை அடைந்து கடலைக் காண்பானானன்.

கடற்காட்சி விரகவேதனையை மிகுவித்தல்.

கடல், தன்னிடத்தே பள்ளிகொண்டிருந்த திருமாலான இராமன் நெடுங்காலம் பிரிந்திருந்தவன் திரும்பிவந்தானென்று சிந்தை களிகூர்ந்து பணியாளனைக்கொண்டு படுக்கையை உதறிவிரிக்கச் செய்தாற்போலத் தென்றற்காற்றால் வெண்மலர்போன்ற நுரையும் முத்தும் சிதறப்பெற்று அலைப்பரப்பு விளங்கியது.

இராமன், சீதையின் பிரிவுத்துயரத்தினால்,

'நென்னற்* கண்ட திருமேனி இன்று பிறிதாய்† நிலைதளர்வான்'

* நென்னல் - நேற்று. † பிறிதாய் - வேறாக.

ஆகி, முன் ஒப்பாகாதிருந்த மலைகள் இப்போது ஒப்பாகப்பெற்றன வென்று கண்டோர் இரங்கிக்கழறுமாறு, மெலியலுற்ற தோள்களின்மீது தென்றற்காற்று அலைகளின் குறுந்துளிகளைத் தூவிய போது, அத்துளிகள் கொல்லனுலையினின்று துள்ளித்தெறித்த தீப்பொறிகள்போலச் சுட்டு வருத்தத் துன்புற்றான். அந்த மந்த மாருதம்*, கடற்கரையில் வளரும் புன்னைமரங்களின் பூந்தேனோடு கலந்த பூந்தாதை,

'செந்தழலின் சாற்றைப் பிழிந்து செழுஞ்சீதச்
சந்தனமென் றூரோ தடவினர் !'

என்றவாறு அவன்மீது பூசி வேதனைசெய்தது. கடலிலே காணப்பட்ட கொடிப்பவளம் 'படி† எழும் தலைமேற்கொண்ட கற்பினாள்' ஆன சீதாதேவியின் செவ்வாயைச் சிந்தைகூரச்செய்து மனவருத்தம் மிகவிளைத்தது.

கடல் ஒலித்தல் சீதையின்பொருட்டுக் கதறியழுதல்போலுதல்.

கடல், 'யான் பெற்ற பாவை, உன்னைப் பிரிந்து தனியளாயிருக்கின்றாள்: இது தகுமோ!' என, அலைக்கைகளை உயர்த்தி மடக்கித் தாழ்த்தி இராமன்பாதங்களிற் படியச்செய்து காலைப்பிடித்துக் கொண்டு, ஓ ஓ! என்று அலறியழுதல்போல ஒலித்தது‡.

இராமன் சீதை கவரப்பட்டதை நினைந்து மானம் மீக்கூர வருந்தல்.

புறத்தே புலனான கடலுக்கு எழுமடங்குகொண்ட கடல் போல, அகத்தே மனையாளை மாற்றான் கவர்ந்த மானக்கடல் பொங்கிப் பெருகாநிற்க, இராமன் வருந்திக்கொண்டிருந்தான்.]

கடல்காண்படலம் முற்றியது.

---

* மந்தமாருதம் - தென்றற்காற்று. † படி - பூமி (—பூமியிலுள்ளோர்).
‡ 'இராமனதுநிலைமையைக்கண்டால் இரக்கங்கொண்டு கடல் ஒலியாதிருக்கலாமே; அதுவோ அங்ஙனம் ஒலியாதிருப்பதில்லை: கடலொலித்தாலும் தென்றற்காற்றுவது இராமபிரான்மேல் வீசாதிருக்கலாமே; அதுதான் வீசட்டும்: அத்தென்றல் கடலில் திரைத்திவலையையளைந்தவண்ணம் வந்து புன்னைமலர்களின் மகரந்தப்பொடியைப் பூசாமலாவது இருக்கலாமே; அது அவ்வண்ணம் வாளாவிராமல் திரைமேல் தவழ்ந்துவந்து புன்னைமலர்ச் சுண்ணத்தையும் இராமபிரான்மீது பூசி அப் பிரானது உயிரை மாய்க்க வருகின்றதே! அந்தோ! என்று கவி இரங்கிக் கூறியவாறு.' ஸ்ரீ வை. மு. கோபாலகிருஷ்ணமாசாரியர்.

2. இராவணன் மந்திரப்படலம்.

[இராவணன் மந்திரிமார் முதலானுரோடு ஆலோசனைசெய்ததைக் கூறுவது; மந்திரம் - ஆலோசனை.]

தீயுண்ட இலங்கை சீராக்கப்பெற்றமை.

[அனுமானல் எரியுண்ட இலங்கையைத் தெய்வத்தச்சனை மயன், பிரமதேவன் இது இது இவ்விவ்வாருக அழகுபெற அமைய வேண்டுமெனக் குறிப்பித்தபடியே செய்து அந் நகரத்தை முன்னையினும் பன்மடங்கு அழகுடையதாகப் புதுப்பித்தான். புதுப்பித்த நகரத்தை இராவணன் பார்வையிட்டு மிகவும் மகிழ்ந்து, பிரமனுக்குப் பூசனையும் மயனுக்குச் சம்மானமும் செய்து, 'போய்வாருங்கள்' என்று விடைகொடுத்தனுப்பினன்.

இராவணன் ஆலோசனைச்சபையில் அமர்தல்.

அனுப்பினவன் மற்றக்கட்டடங்களோடும் புதுப்பிக்கப் பெற்ற பொன்னாலும் மணியாலும் பொலிவுற்ற ஆயிரக்காற்*சபா மண்டபத்திலே, அரியணை†மீதே கொலுவீற்றிருந்தான்.]

சுற்றத்தார் முதலோர் சூழ்ந்திருத்தல்.

2. வரம்பெறு[1] சுற்றமு மந்தி ரத்தொழில்
நிரம்பிய முதியருஞ் சேனை நீள்கடல்[2]
தரம்பெறு தலைவருந் தழுவத் தோன்றினன்[3]
அரம்பையர் கவரியோ டாடுந் தாரினன்.

கொண்டுகூட்டு: அரம்பையர் கவரியோடு ஆடும் தாரினன், வரம்பெறு சுற்றமும் மந்திரத்தொழில் நிரம்பிய முதியரும் நீள்கடற்சேனை(யில்) தரம் பெறு தலைவரும் தழுவத் தோன்றினன்.

பொருள்: அரம்பைமாதர் (இருபக்கத்தும் நின்று வீசுதலால் அசையும்) சாமரைகளோடு (அச் சாமரைக்காற்றினல்) அசையும் மாலைபணிந்தவனுன இராவணன், (தன் சுற்றத்தாருள்ளே தவஞ் செய்து) வரங்கள்பெற்ற (பிரபலரான) சுற்றத்தாரும் ஆலோசனைத் தொழில் (செய்தலில் தேர்ச்சி) மிகுந்த (அனுபவம்) முதிர்ந்த பெரியோரும் உயர்பதவியுடைய சேனைத்தலைவரும் (தன்னை அடுத்துச்) சூழ்ந்திருக்க விளங்கினன்.

---

* கால் - தூண். † அரியணை - சிங்காதனம்.

சுற்றம்—உறவினர். மந்திரம்—ஆலோசனை. முதியர்—முதியவர்—முதுமையுடையவர்—மூத்தோர். நீள்கடற்சேனை(யின்) என மாற்றுக. தரம் - உயர்வு - மேன்மை. நீள்கடல் சேனை(யில்) தரம்பெறு தலைவர் - பெரிய கடல்போன்ற படையில் (தலைவராயுள்ளாருள்) உயர்வுபெற்ற தலைவர். தழுவுதல் - சூழ்தல்: (பெரும்பாண் - 242) தமிழகராதி.

இராவணனை அடுத்துச் சூழ இருந்தவர், ஒவ்வோ ரினத்தாருள்ளும் சாமானியரல்லாதவரும் ஆலோசனைசெய்தற்குத்தக்க சிறப்புடையாருமான வர்களென்பது குறிக்க, வெறுமனே சுற்றமும் மந்திரிகளும் சேனைத்தலைவரு மென்னது, 'வரம்பெறுசுற்றமும்' 'மந்திரத்தொழில் நிரம்பிய முதியரும்' 'சேனை நீள்கடல் தரம்பெறு தலைவரும்' என்றார். இதன்பின் ஆலோசனை கூறும் சுற்றத்தார் தவஞ்செய்து வரம்பெற்றோரான கும்பகருணனும் இந்திர சித்தும் விபீடணனுமாகவிருப்பதும், வேறெந்தச் சுற்றத்தாரும் ஆலோசனை கூறியதாகக் கூறப்படாமையும் மேற்கூறியதை வலியுறுத்தும்.

கடையடியிலுள்ள கவிசமற்காரம் கவனிக்கத்தக்கது.

பாடபேதம்: [1] வரம்பறு. [2] கழல். [3] எறினன்.

[அவ்வாறு விளங்கிய இராவணன், தன் உள்ளத்தேயுள்ள காரியத்தைக் கலக்கத்தக்காரோடு கலந் தாலோசிக்கக்கருதி அதற்கு விரோதமாகவுள்ள தேவர் முனிவர் முதலிய யாவரையும் 'அப்பாற்செல்க' என் ஆலோசனைமண்டபத்துக்கு அப்புறப் படுத்தினன்; புலவர்கள் அறிஞர்கள் நண்பர்கள் உறவினர் மந்திரி கள் வீரர்களாகியவருள்ளே, நற்குண நற்செய்கைகளுடையவரும் நெடுங்காலம் பழகினவரும் தன்மக்கள் தம்பியர்போன்ற அன் புடையவருமானவர்களல்லாதாரெல்லாரையும்அப்புறப்படுத்தி னன். பின்பு, இரகசியம் வெளிப்படாதிருக்கும்பொருட்டு 'வண் டொடு காலையும்* வாவுமாற்று'ம் மனத்தினனாய், பார்த்தமாத் திரத்திலே பறவை மிருகமுதலிய பலபிராணிகளும் பயந்து தம்பித் துச் சித்திரப்பிரதிமைகள்போலச் செயலற்றிடச்செய்யும் பயங்கர சொரூபிகளான இராக்கதக்காவலாளரை, 'எங்கிருந்தும் எவரும் இங்கே அணுகாதபடி காமின்கள்' என்று கட்டளையிட்டு, நாலு வாயில்களிலும் காவலாக நிறுத்தினன்; அதன்பின் தன்னைச் சூழ்ந்திருந்தவர்களைநோக்கிச் சொல்லுகின்றான்:

---

* கால் - காற்று.

'இதனினும் இழிவானது யாதிருக்கின்றது! எனது மாட்சி ஒரு குரங்கினால் தாழ்ச்சியுற்றது! இவ்வாறு வீழ்ச்சியுற்ற எனது ஆட்சி நன்றாயிருக்கிறது!']

இராவணன், குரங்கினால் நேர்ந்ததைக் கூறி வருந்தல்.

3 சுட்டது குரங்கெரி சூறை யாடிடக்[1]
கெட்டது கொடி[2]நகர் கிளையு நண்பரும்
பட்டனர்[3] பரிபவம் பரந்த தெங்கணும்
இட்ட[4]விவ் வரியணை யிருந்த தென்னுடல்.

கொண்டுகூட்டு: எரி சூறையாடிடக் கொடிநகர் கெட்டது. கிளையும் நண்பரும் பட்டனர். பரிபவம் எங்கணும் பரந்தது. இட்ட இவ்வரியணை(யில்) என் உடல் இருந்தது.

பொருள்: 'அக்கினிதேவன் கொள்ளைகொள்ளும்படி (இலங்கையைக்) குரங்கு கொளுத்தியது. வெற்றிக்கொடி பறந்த (அந்த) நகரம் பாழானது! (அந்தத் தீயினால்) என் உறவினரும் நண்பினரும் மடிந்தார்கள்! (இவ்வாறு குரங்கினால் நேர்ந்த) அவமானம் (பற்றிய பேச்சு) எங்கும் பரவியது! (இங்கே) இடப்பட்டிருக்கிற சிங்காதனத்திலே (யானில்லை) என் தேகம் இருக்கின்றது.'

எரி - அக்கினி - அக்கினிதேவன். சூறையாடல் - கொள்ளையிடல். கிளை - சுற்றம் - சுற்றத்தார். பரிபவம் - அவமானம்; இழிவு. 'பரிபவம்' ஆகுபெயராய்ப் பரிபவம்பற்றிய பிரஸ்தாவத்தை உணர்த்தியது.

மூவர்முதலிய யாவரும் அஞ்சி அடங்கி ஒடுங்கச்செய்த பராக்கிரமமுடைய யான் ஒரு குரங்கின்குறும்பினால் இப்படிப்பட்ட அவமானமடைந்த பின் இருப்பது, தோற்றத்தில் இராவணனிருப்பதாய் உண்மையில் இராவணனது உயிர்போன உடலேயிருப்பதாமென்றும், கீர்த்தியொழிந்து அபகீர்த்தியடைந்த யானிருப்பது உயிரிழந்து பிரேதத்தன்மையடைந்த உடலிருப்பதாமென்றும், அப்படியிருப்பதிலும், யாரும் காணாதபடி தாழ்வான எவ்விடத்தேனும் அடங்கியிருந்தொழியாமல், உயர்வான சிம்மாசனத்திலே, ஆடம்பரமாக வீற்றிருக்கின்றேனே! என்றும் இராவணன் தன்னை வெறுத்துகொந்து ரோசத்தோடுகூறினனென்ற விரிவானபொருளை,

'இட்ட இவ்அரியணை யிருந்த தென்னுடல்!'

என்ற கனியினிய மிகச்சிறிய கவித்துணுக்கினாற் கட்டுரைத்த கவிசாதுரியம் கண்டு களிக்கத்தக்கது.

பராக்கிரமமாகிய, தன்செயலற்ற தன்னைப்போலத் தான் அமர்ந்தசிங்காசனமும் தன்செயலில்லாததென்பதை நினைந்து, அதனை, 'இவ்வரியணை' என்று சுட்டினமட்டில் விட்டிடாமல், 'இட்ட இவ் அரியணை'யென்று 'தானுள்ள இடத்துக்குத் தானாகவாராமல் பிறராற் கொண்டுவந்துவைக்கப்பட்ட' என்ற பொருள் குறிக்கும் 'இட்ட' என்ற அடைகொடுத்துக் கூறினன்போலும்.

பாடபேதம்: [1] ஆடின. [2] கடி. [3] பட்டது. [4] இட்டது.

'யாது செய்வது?' என்று இராவணன் வினவல்.

['வேறு பேறு பெற்றிலேமென்றாலும், அந்தக் குரங்கு இறந்ததென்றுகேட்கும் பேறேனும் பெற்றேமில்லை. பழியிலே முழுகினேம். இப்போது யாதுசெய்வது?' என்று சபையோரைவினவினான்.

சேனாபதி ஆலோசனை.

அப்போது சேனாபதி* எழுந்துநின்று தொழுது 'யான் ஆதியிலேயே "சீதையை அடைதற்குச் செய்யத்தக்கது வஞ்சனையன்று, போரே" என்று புகன்ற ஆலோசனையைப் புறக்கணித்தாய். பகைவருறைவிடஞ்சென்று அவர்களைக்கொல்வதைவிட்டு இலங்கையிலிருந்து இன்பம் அனுபவிப்போமானால், நம்மவரைக் குரங்கு மாத்திரமா, கொசுகுமே கொன்றிடும். ஓடிப்போன குரங்கைத் தேடித்தொடர்ந்துபோய், அதனையும் அதனை ஏவினவரையும் கொன்றுதீராமல் நிகழ்ந்த தீங்குகளை நெஞ்சால் நினைந்துகொண்டும் வாயால் கூறிக்கொண்டும் வாளா இருப்போமானால் நமக்கு இருக்கிற வலிமையும் குறைந்துவிடும்' என்றான்.

மகோதரன் ஆலோசனை.

அவன்பின், மகோதரன் எழுந்து, 'உன்வலிமையினால் வானவர் முதலியோர் யாவரும் அடங்கினர்; மூவரும் ஒடுங்கினர்; எல்லாருயிரையும் கொள்ளும் எமன், உன்னைத் தன்னுயிர்கொள்ளும் எமனென்றஞ்சி, உனக்குக் கீழ்ப்படிந்து, உன் கட்டளைகளைத் தலைமேற்கொண்டு நிறைவேற்றுகிறான். வெள்ளிமலையை விடபாரூடனான பரமேசுரனோடு வானமளாவச் செந்தூக்காகத் தூக்கிச் சீர்த்திபெற்ற சிறப்புடைய உனது திண்டோள்வலிமையை ஓர்

---

* 'சேனையைச் செலுத்தவேண்டுவது தன் தொழிலாகையால், முதன் முதலிற் சேனாநாயகன் விடைகூறலாயினன். இராட்சசசேனாபதியின் பெயர் ப்ரஹஸ்தனென்று ஸ்ரீ வால்மீகிராமாயணத்தாற் பெறப்படும்.'

வை. மு. கோ.

அற்பக்குரங்கின் தோள்வலியோடு ஒப்பிட்டுக் குறைவுபடுத்து கிருயே. மிக்க பலசாலிகள்பொருட்டுச் செய்யத்தக்க ஆலோசனை யை வலியற்ற மனிதர்பொருட்டுச் செய்யலாமோ? என்னை ஏவுவா யானல், யான் சென்று அந்தக்குரங்கையும் மனிதரையும் கொன்று பகைமுடித்துத் திரும்புவேன்' என்றான்.

வச்சிரதந்தன் ஆலோசனை.

'"நீங்கள்போய் மனிதரையும் வானரங்களையும் மாய்த்து விட்டுவாருங்கள்" என்று ஏவிவிட்டு இனிதேயிராமல், "இப்போது என்னசெய்யலாம்?" என்று எங்களோடு எண்ணமிடுவானேன்? யாங்கள் வெல்லவல்லமோ அல்லமோவென்று சந்தேகங்கொண் டாய்போலும். உன் ஏவலின்படிசெய்யாதபகைவர் எங்கிருந்தா லும் சென்று பணிச்செய்த யானிருக்க, மனிதரையும் வானரரை யும் மாய்க்கும்பணியை எனக்குத் தராமலிருப்பானேன்?' என்று வச்சிரதந்தன் சொன்னான்.

துன்முகன் ஆலோசனை.

'மகாவீரனை நீ எளிய குரங்கையும் மனிதரையும் குறித்து ஆலோசனைசெய்தல் குறைவானது. மனிதரும் வானரரும் நமக்கு உணவுப்பொருள்கள். (தின்பண்டங்களைக்கண்டு சிறுவரும் அஞ்சா ரே.) அரக்கர் அவர்களுடைய உணவுப்பொருள்களுக்கு அஞ்சுவா ரானல், அவரினும் தீரர் ஆரிருக்கின்றார். கருங்கடலைக்கடந்து வந்து எதிர்ந்தாரைக்கொன்று இலங்கையை எரிக்கிரையாக்கித் திரும்பிப்போய்விடுவது குரங்குக்கு எளிதாயிற்று! அதனைத் தொடர்ந்துசென்று கொன்றிடுதற்கு ஊரைக்கடத்தல் அரக்க ருக்கு அரிதாயிற்று! குரங்குசெய்ததுபோல, இதுவரையும், இங்கே துணிந்துவந்து நம் இருப்பிடங்களையும் காவல் கட்டுகளை யும் சேனைப்பெருக்கையும் தீரத்தன்மையையும் தெரிந்துகொண்டு சீவனோடு திரும்பிப்போனவர் யாவரேனும் இருக்கின்றார்களோ? நமக்குப் பொருத்தமானது யாது, உறுதியானது எது என்று சிந்தித்துப்பார்த்தாலும் வெற்றியை விரும்பினாலும் செய்யத் தக்கது உடனேசென்று அவர்களைக் கொல்வதே' என்று துன் முகன் சொன்னான்.

மகர்பார்சுவன் ஆலோசனை.

மகாபார்சுவன், '''நில், நில், நீ கூறுவதை நிறுத்து''' என்று கையமர்த்தி, 'கோபமும் பலமும் குரங்குக்குத்தானா? முன் சில வலியற்ற அரக்கர் குரங்கினால் இறந்ததோடு அரக்கர்வலிமை யனைத்தும் அழிந்துவிட்டதா? குரங்குவைத்த தீயின் கோரவெம்மை அழிந்துவிட்டதுபோல, இராக்கதர் வீரவெம்மையும் அவிந்துவிட்டதா? எவினவரோ, இரண்டுமனிதர்; துணிந்துவந்து சுட்டதோ, ஒரு குரங்கு: இதுகுறித்து எண்ணிவருந்துவார் எண்ணிறந்த இராக்கதரென்றால், இனி நடப்பதை இயம்பவேண்டுமோ! அங்கேபோய்க் கையாற் செய்வதைவிட்டு, இங்கேயிருந்து, வாயாற் பேசிக்கொண்டிருப்பது, எனக்குப் பிடிக்கவில்லை. நரர் வானரரென்ற நாமமே நசித்தொழியும்படி அவர்களைக் கொன்றுதின்ற பின்பே எந்தக் காரியத்தையும் எண்ணக்கடவேம்' என்றான்.

பிசாசன் ஆலோசனை.

அக்கினி, அவயவங்கள் அடைந்து, ஆள்வடிவங்கொண்டாற் போன்ற பிசாசன், 'நம் அரசன் அஞ்சினவனாய் ''யாது செய்வது?'' என்று வினவலானான். செய்வது, மன்னன் அஞ்சின மானக்கேட்டை நினைத்து, இங்கேயிருந்து வாழ்வதைவிட்டு, எட்டுத் திக்குக்களையும் நோக்கி ஏகியொழிவதே' என்று வெறுப்போடு விளம்பினான்.

மற்றவர் ஆலோசனை.

சூரியசத்துருவும் யாகசத்துருவும், இவ்வாறு ஆலோசிப்பது மனிதரை உயர்த்தி அரக்கரைத் தாழ்த்துவதாமென்ற கருத்துப் படத் தங்கள்கருத்தை உரைக்க, தூமிராட்சன், 'மனிதரை நோக்கி நாம் போர்க்குப்புறப்பட்டுப்போவதைப் புகல்வானேன், சிவனைநோக்கிச்செல்லினும் சிரிப்புக்கிடமாம். நாம் இருந்த இடத்தே யிருந்து, அவர்கள் வருவாரானால், பொருவோம்' என மற்றவர்களும் அதுவே சரியாமென்றனர்.]

[தொடரும்.]

வெ. ப. சுப்பிரமணியமுதலியார்.

பாஞ்சராத்திரம்.

[௨௨அ-ஆம் பக்கத் தொடர்ச்சி.]

மூன்றாமவர்:—நீவிர் நன்குநவின்றீர்;

ஊதயாவலக்ஷயா ஸஂயெ ஶாஷயா வெஷிதஸ்தாா꞉।
நிவிஷொ ஸக்தொ வாயா꞉ ஸ்ரீஷொஷெணைவ உஹ்யதெ॥

தீய ஒழுக்கமுள்ள மடந்தையைச்சேர்வதால், நற்குடிப் பிறந்தானொருவன் கெட்டழிவதுபோல், உலர்ந்தகொடியால் தழுவப்பட்ட கிளைகளையுடையதான மரம் எரிக்கப்படுகிறது.

முதலாமவர்:—நீங்கள் மற்றொன்றையும் பார்ப்பீர்களாக.

வநம் ஸவ்ருக்ஷக்ஷுபகுல்மதக꞉
ப்ரகாமோஹாரவிஶாலஹஜ்ய꞉।
கஶா நஸாரெண ஹநாஶநௌஸா
நதீஷுவஶுஷஜிவாவதீண꞉॥

அக்கினியானது, பெரிய மரங்களையும், சிறு விருக்ஷங்களையும், புதர்களையும் வயிறார உணவுகொண்டு, ஆசமனம்செய்வதற்காகத் தருப்பைப்புற்களை அநுசரித்து ஆற்றில் இறங்குவதுபோலும்.

இரண்டாமவர்:—இது! இது!

ஶஂதாவ்ருக்ஷாத்வ்ருக்ஷம் விததகஶஹீரெண உஹந꞉
கஜயூா விஹஷம் வததி வரிணாமோஜிவ ஶஷ்ட।

[illegible]

[illegible]

(தபஸ்வியொருவன்) தருப்பைகளையும் மரவுரிகளையும் உடுத்துக்கொண்டு ஒரு மரத்தின் அடியிலிருந்து வேறொருமரத்தை அணுகுவதுபோல், அக்கினியானது உலர்ந்த புற்களிலும் மரப்பட்டைகளிலும் பற்றிக்கொண்டு ஒருமரத்திலிருந்து வேறொரு மரத்துக்குச் செல்கிறது; காம்பில் பால்வற்றியதால் முதிர்ந்தபழம் உதிர்வதுபோல், தீயாற்சுடப்பட்ட வாழைப்பழம் கீழே விழுகிறது; நீண்டநேரமாக வேர் எரிபட்டதால் இதோ ஒரு பனைமரம் வட்டவடிவமுள்ள பெரிய தேன்கூட்டுடன், உருத்திரமூர்த்தியின் கோடரிபோல் (கீழே) சாய்கிறது.

மூன்றாமவர்:—சாதுக்களின் சினம்போல், அக்கினிபகவான் தணிந்துவிட்டார்.

[illegible]

[illegible]

பொருள்குன்றியதால் கொடையாளியின் ஈகை குறைவுபடுவதுபோல், எரிதுரும்பு அற்றுப்போனதால், அக்கினியின் வலிமை குறைகிறது.

முதலாமவர்:—

[illegible]

[illegible]

வறுமையடைந்தமனிதன், தன்னுடைய ஆடையாபரணங்களைவிற்றுக் காலக்ஷேபம்செய்வதுபோல், 'ஸ்ருக்' என்று பெயருள்ள மரத்தாலான வேள்விப்பாண்டங்களையும், அரணிக்கட்டையையும், தருப்பைகளையும், (அணைகிற) அக்கினி கவர்கிறது.

இரண்டாமவர்:—

சுவநதவிடிவொ நீவஹாஸ:

வவநவஸாதுூிெதகவண-ஹஸ்ூ: ।

ஏவஏஹநவிவளுஜீவிதாநா -

உஏகதிெவெஷ கரொதி வாஏவாநாு ॥

ஆற்றின்கரையிலுள்ள பலாசமரங்கள், நீர்ப்பெருக்குவரையில் தொங்குகிற கைகளாகிற கிளைகளுடன், காற்றினல் அசைக்கப்படுகிறதான இலைக்கரத்தால், காட்டுத்தீயால் அழிந்துபோன விருக்ஷங்களைக் குறித்து ஜலதர்ப்பணம் செய்வதுபோலும்.

மூன்றுமவர்:—ஆதலால் நாமும் ஆசமனம் செய்யச்செல்வோம்; வருவீர்களாக.

மற்ற இருவரும்:—நல்லது.

(எல்லோரும் ஆசமனஞ் செய்தல்.)

முதலாமவர்:—ஓ! இங்கே எழுந்தருளியிருக்கிற அரசர்களால் பின்தொடரப்பட்ட துர்யோதனமகாராஜா பீஷ்ம துரோணர்களை முன்னிட்டுக்கொண்டு இவ்விடமே வருகிறார். இந்தப் பட்டினத்துஜனங்களோ வென்றால்,

யஜெூந ஹொஜய உஹீ ஜய விகுமெண

ரொஷ வரிதுஜ ஊவ ஸுஜநெ ஏயாவாநு ।

ஊதெ்ுவஊமதகயாஊயாஙஂ வுஏவஷ:

கூவ-ஷி வாணுவவரிஹுஸெஉவவெளாஸ: ॥

‘ஓ! அரசரே! வேள்விகளை நன்றாய் நிறைவேற்றுவதால், மக்கள் யாவரையும் களிக்கச்செய்வீர்களாக; பராக்கிரமத்தால் (பிறர்) நாடுகளை வெல்வீர்களாக; கோபத்தை விட்டுவிடுவீர்களாக; தம்மைச்சார்ந்த மனிதர்களிடம் தயவுடன் இருப்பீர்களாக’

என்று இவ்விதமாக வேள்வியைக்குறித்த பிரஸ்தாவத்தால் பிரியமான வார்த்தைகளையுரைத்துக்கொண்டு, பாண்டவர்களிடம் தங்களுக்கிருக்கிற அன்பை வெளிப்படுத்துகிருர்கள்.

வாருங்கள் நாமும் குருகுலமன்னரை ஆதரவுடன் மரியாதை செய்வோம்.

மற்ற இருவரும்:—நல்லது.

எல்லோரும்:—(அரசே!) தாங்கள் மேன்மையுடன் விளங்குவீர்களாக.

(எல்லோரும் வெளியேறுதல்.)

விஷ்கம்பம்.

(பிறகு பீஷ்மரும் துரோணரும் அரங்கத்தில் நுழைதல்.)

துரோணர்:—வேள்வியென்ற தர்மத்தைக் கைக்கொண்டுள்ள துரியோதனனுல், நானே மரியாதைசெய்யப்பெற்றேன்.

ஊதீதுவஙு ஙிநவஜூவு திதுா
ணுாவாய ஸோஹஷதி ஶிஷுஷொஷஃ ।
ஸாஜூஹுவதுஂ ஹரவெ வூஷாதா
ஒெநவோவராயொZஷிஷிதாநஸோதாஃ ॥

சீடன்குற்றமானது, பந்துக்களைக்கடந்தும் தோழர்களைப் புறக்கணித்தும் ஆசானையே அடைகிறது; நல்வழிப்படுத்துவதற்காகச் சிறுவனுன புதல்வனை ஆசார்யரிடம் ஒப்புவித்தவர்களான தாய்தந்தையர்களுக்கு ஒருவிதமான தோஷமும் பொறுப்பும் இல்லையல்லவா?

பீஷ்மர்:—இந்தத் துரியோதனன்,

ஊவாவு ரஙிவுரு ஹணாக ஸஶோஷுயஂ
ரணஷிுயவுதாஷயமொ நிஷீதவாநு ।

நிஷெவ்ய யஉ்டீ ஸாக்ஷ்யதஸ்ய ஹாஜநம்
ஸ ஸனவ ஈஷிவெண ஷிஈஸ்ய ஸௌஹதெ ॥

சூதாட்டத்தில் வெற்றியாற்கிடைத்த பொருளால், மேன்மை அடைந்தவனகத் தன்னைக் கருதிக்கொண்டு, பாண்டவர்களுடன் கலகம்செய்ய விருப்பமுள்ளவனகித் துரோபதையின் தலைமயிரைப் பற்றியிழுத்தது முதலியவற்ருல் அபகீர்த்தியை அடைந்தான்; அவனே இப்பொழுது வேள்வியாகிற தர்மத்தைச்செய்து புண்ணியவானகி, தார்மிகர்வேஷத்தையும் தாங்கி, நிரம்பவும் விளங்குகிருன்.

(பிறகு துர்யோதனன், கர்ணன், சகுனி மூவரும் அரங்கம் ஏறுதல்.)

துர்யோதனன்:—

க்ஷுதஶ்ரெத்ஞா ஹுதாத்ர வஹதி வஸிதொஷம் ஶாஷாஜநெ
ஜஶஷிஸ்ருஷ்டம்ஜெ நிவஸதி ஶாணெ நஷ்டயேஶ: ।
உ்ருதெத: வூாவ்ரூஷ்ஸ்ரஞா பதிஹகயமதெ்ருதஉ்நுதம்
வதொ்ஈகெக்ஷா ந ஸ்ஸரஞா வஹாஶாணஜிதெஹவெஷஹஜதி ॥

என் மனமானது (நற்காரியத்தில்) சிரத்தையுள்ளதாகி விட்டது; ஆதலால் (துரோணர்முதலிய) பெரியோர்கள் என் நடத்தையைக் கண்டு களிக்கிருர்கள்; பிரஜைகளும் என்னிடம் விசுவாசம்வைத்திருக்கிருர்கள்; தயை முதலான நற்குணங்களும் என்னிடம் விளங்குகின்றன; என்னுடைய அபகீர்த்தியும் விலகி விட்டது; இக்காரணங்களால் பரமாநந்தத்தை அடைந்திருக்கிறேன்; சுவர்க்கம் என்பது இறந்தவர்களால்மட்டும் அடையப் பெறுகிறது என்ற வார்த்தை எனக்குப் பொய்யாகத்தோன்றுகிறது; 'சுவர்க்கம்' நமது கண்களுக்குப்புலப்படாதது என்பது இல்லை; அங்கே பெறக்கூடிய பேறுகளை நான் இங்கேயே அடைகிறேனே.

கர்ணன்:—காந்தாரியின்புதல்வரே! நீதியால்வந்த பொருளைச் செலவுசெய்கிறவரான உம்மால் நியாயமானகாரியமே செய்யப்பெற்றது. ஏனெனில்,

ரணாயத்தா க்ஷத்ரியாணாம் ஸம்ருத்தி:
ஶாஸ்த்ராவேக்ஷீ வஞ்ச்யதே ஸஞ்சயாத்தா ।
விப்ரோத்ஸங்கே வித்தராஶி: ஸமக்ரம்
ராஜ்ஞா தேயம் சாபமாத்ரம் ஸுதேப்ய: ॥

போர்செய்தலாலேயே க்ஷத்திரியர்களுக்குப் பொருள் கிடைக்கத்தக்கது, (பரம்பரையாகக் கிடைத்த பொருளைப் பாகம் பகிர்வதால் அல்ல); ஆதலால் செலவொன்றும் செய்யாமல் பணத்தைச் சேர்த்தவனான க்ஷத்திரியன் ஏமாற்றமடைகிறான்; அவன் தன்னுடைய தனம் முழுவதையும் அந்தணர்களின் மடியில் சமர்ப்பிக்கவேண்டும், (அதாவது அவர்களுக்கு அளிக்கவேண்டும்); அரசன் தன்னுடைய புதல்வர்களுக்கு வில்லைமட்டும் கொடுக்கவேண்டும்.

சகுனி:—கங்கைநீரை ஆசமனம்செய்து பாவமற்றவனான அங்கதேயத்தரசன் நன்மையை உரைக்கிறான்.

கர்ணன்:—

இக்ஷ்வாகுஸ்ஸ யயாதிராமௌ
மாந்தாத்ரு நாபாக ந்ருகாம்பரீஷா: ।
நஷ்டா: ஸகோஶா: ஸஸாரா: ஸராஷ்ட்ரா
ஸ்பஷ்டா: ஶரீரை: க்ரதுபிர்த்ரியந்தே ॥

இக்ஷ்வாகு, யயாதி, இராமன், மாந்தாதா, நாபாகன், நிருகன், அம்பரீஷன்: இவர்கள் யாவரும் பணக்குவியல்களுடனும் ராஜ்யத்துடனும் அழிந்துவிட்டார்கள்; (ஆனாலும்) வேள்விகளான சரீரத்தினால் (இன்னும்) உயிருடனிருக்கிறார்கள்.

(சபையோர்) எல்லோரும்:— காந்தாரிதேவியின்புதல்வரே! யாகத்தை நிறைவேற்றியதால், நீங்கள் மிகப் பிரகாசிக்கிறீர்கள்; நிரம்பச்சந்தோஷம்.

துர்யோதனன்:—

அநுக்கிரகிக்கப்பெற்றேன். ஓ! ஆசார்யரே! நான் நமஸ்கரிக்கிறேன்.

துரோணர்:—வா வா. குழந்தாய்! இது சரியல்ல.

துர்யோதனன்:—எது சரியானது?

துரோணர்:—நீ தெரிந்துகொள்ளவில்லையா?

தைவதம் மாநுஷீஹூதமேஷதாவநமஸ்யதாம்।
அஹம் நாவாணம்மெந்ய ஹீஷ்மமாத்ருவதிதாம்॥

மனிததேகத்தைக்கொண்ட இந்தத் தெய்வம் நமஸ்கரிக்கப் பெறட்டும்; பீஷ்மரை (வணங்காமல்) விட்டுப் பிறரை வணங்குவது ஒழுங்கல்ல.

பீஷ்மர்:—தாங்கள் இவ்விதம் சொல்லவேண்டா, வேண்டா. தங்களைக்காட்டிலும், நான் அநேககாரணங்களால் தாழ்ந்தவன். ஏனெனில்,

அஹம் ஹி மாத்ரா ஜநிதோ ஹவாநு ஸ்வயம்
மமாயாயம் வ்ருத்திரவஹநவஹவ।
திஜோ ஹவாநு க்ஷத்ரியவம்ஶகா வயம்
ஶாஸ்ஹவாநு ஶிஷ்யமஹதாராவயழ॥

நான் தாயின்வயிற்றில் பிறந்தவன், தாங்களோ (அயோநிஜர்) தாமாக உண்டானவர்கள்; எனக்கு ஆயுதமெடுத்த (போர்செய்த) லே தொழில், தாங்களோ ராகத்துவேஷங்கள் அற்று எல்லோரிடமும் தயவுள்ளவர்; தாங்கள் அந்தணர், நானோ க்ஷத்திரிய

வம்சத்தில் பிறந்தவன். தாங்களோ ஆசார்யர், நான் சீடர்களுக்குள் முதன்மைபெற்றவன். (ஆகையால் நம்மிருவர்க்குள்ளும் உள்ள வேற்றுமைகள் பல.)

துரோணர்:—மகான்கள் தங்களைக் குறைத்தே கூறிக்கொள்வார்கள். புகழ்ந்துகொள்வதில்லை. குழந்தாய்! வா, என்னை வணங்குவாயாக.

துர்யோதனன்:—ஆசார்யரே! நமஸ்கரிக்கிறேன்.

துரோணர்:—வா வா! குழந்தாய்! இவ்விதமே (வேள்விகளை நடத்தி) அவபிருதஸ்நாநங்கள்செய்வதால், சிரமத்தையடைவாயாக.

துர்யோதனன்:—அநுக்கிரகிக்கப்பெற்றேன்; (பீஷ்மரைநோக்கி) தாத்தா! நமஸ்கரிக்கிறேன்.

பீஷ்மர்:—பேரப்பிள்ளாய்! இவ்விதமே உன்மனதுக்கு அமைதி ஏற்படுவதாக.

துர்யோதனன்:—அநுக்கிரகிக்கப்பெற்றேன். (சகுனியை நோக்கி) மாமா! நமஸ்கரிக்கிறேன்.

சகுனி:—குழந்தாய்!

ஸர்வாநேவ க்ரதூந் ஸமாப்ய ஸம்பூர்ணதக்ஷிணாந் ।
ராஜஸூயே ந்ருபாந் ஜித்வா ஜராஸந்த இவாநய ॥

பூர்ணமான தக்ஷிணைகள்கொடுத்து எல்லாவேள்விகளையும் முடித்து, ராஜஸூயமென்ற யாகத்தில் அரசர்களைவென்று, ஜராஸந்தன்செய்ததுபோல் அவர்களை(ச் சிறையில் வைப்பதற்கு)க் கொணர்வாயாக.

துரோணர்:—ஓ! ஆசிகூறும்போதும், போர்செய்வதில் முயற்சியையே சகுனி உபதேசிக்கிறுன். ஓ! இந்த க்ஷத்திரியச்சிறுவன் விரோதம்செய்வதிலேயே, பிரியமுள்ளவனக இருக்கிறுன்.

துர்யோதனன்:—தோழனே! கர்ண! பெரியோர்களை வணங்கியபின், ஒழுங்காகத் தோழனுக்குரிய மரியாதைகளைப் பெற்றுக்கொள்வாயாக.

கர்ணன்:—காந்தாரியின்புதல்வனே!

க்ஷாந்த்யா வ்ரதைஸ்ச தநூக்ருதஸ்தே
ஸோடும் பலம் ஸக்ஷ்யதி வீர்யதாம் ।
அத்ஸ்வ நாஸ்ம்யஹம் ந ப்ரதர்ஷயாமி
ராஜர்ஷிஸப்தோ ஹி நவாப்த ஏஷ ॥

உமது சரீரம் யாகதீக்ஷையில் உபவாசம் முதலிய நியமங்களால் இளைத்திருக்கிறது. என்னால் தழுவப்பெறுங்காலத்தில், எனது வலிமையைப் பொறுத்துக்கொள்வீரானால், இறுகக் கட்டிக்கொள்வேன். உம்முடன் பிரியமாக வார்த்தையாடுவதைத் தவிர, உமது மனச்சமாதானத்தை நான் கெடுக்கமுயலமாட்டேன். உமக்கு "ராஜருஷி"யென்ற திருநாமம் இப்பொழுது கிடைத்திருக்கிறது; உமது தூய்மையுள்ள சித்தவிருத்தியைக் கெடுக்கப்புகுவது மிகவும் பாவமான காரியமே.

துர்யோதனன்:—உனதுபுத்தி இவ்விதமே இருக்கட்டும்.

துரோணர்:—பிள்ளாய்! துர்யோதன! மகேந்திரனுடைய பிரியமான தோழரான பீஷ்மகர் என்பார் உன்னைக் காண எழுந்தருளியிருக்கிறார்.

துர்யோதனன்:—பெரியோர்க்கு நல்வரவாகுக; நமஸ்காரம்.

பீஷ்மர்:—தென்தேயத்தைக் காப்போரான 'பூரிசிரவா' என்போர் உன்னைக் கண்டுகொள்ள வந்திருக்கிறார்.

துர்யோதனன்:—பெரியோர்க்கு நல்வரவு.

துரோணர்:—குழந்தாய்! துர்யோதன! உனது யாகத்தைக் கௌரவப்படுத்துகிற ஸ்ரீகிருஷ்ணனால் அனுப்பப்பெற்ற அபிமன்யு உன்னை வணங்குகிறான்.

சகுனி:—குழந்தாய்! துர்யோதன! ஜராஸந்தன்புத்ரனான இந்த ஸகதேவன் உன்னை நமஸ்கரிக்கிறான்.

துர்யோதனன்:—வா வா குழந்தாய்! தகப்பனுக்குச் சமமான பராக்கிரமத்துடன் விளங்குவாயாக.

எல்லோரும்:—அரசர்குழாம் உம்மை வணங்குகிறது.

துர்யோதனன்:—அநுக்கிரகிக்கப்பெற்றேன். ஓ! எல்லா அரசர்களும் வந்திருக்கும்போது விராடன் ஏன் வரவில்லை?

சகுனி:—நான் அவனுக்கும் தூதனை அனுப்பினேன், வழி வந்துகொண்டிருப்பானென்று சந்தேகிக்கிறேன்.

துர்யோதனன்:—ஓ! ஆசார்யரே! தர்மத்திலும் வில்வித்தையிலும் ஆசார்யரே! தக்ஷிணைபெற்றுக்கொள்வீராக.

துரோணர்:—தக்ஷிணையா? அது இருக்கட்டும், இருக்கட்டும். அதைப்பற்றி உன்னைப் பிறகு பிரார்த்திப்பேன்.

துர்யோதனன்:—ஆசார்யருங்கூடப் பிரார்த்தனைசெய்வதேன்.

பீஷ்மர்:—

வீதஃ ஸோமோ வாயவ்யக்நௌ நியோகா
ஶுஶ்ரூஷாஸேவ்யதே வ்யாக்ரமுக்யா ।
கிம் தஸ் த்ரவ்யம் கிம் ஸுகம் கோ விஶேஷஃ
க்ஷத்ராசாயே யத்ர விப்ரா ஸமீக்ஷ்ரஃ ॥

இதில் ஒரு பிரயோசனமும் இல்லை; ஏனெனில், தகுந்தவயதிலேயே வேள்வி நடத்தப்பெற்றது; சாஸ்திரப்படி ஸோமபானமும் செய்யப்பெற்றது; (ஆசாரியரால்)உனது குடைநிழல் அடையப் பெற்றிருக்கிறது; மிகுதியான புகழ் உனக்கு இருக்கிறது; ஆசார்யரோ தரித்திரராய் இருக்கிறார்; பெரியோரான அந்தணர் எளியவராய் இருக்கும்போது, பொருளாலும், புண்ணியத்தாலும், போகத்தாலும், புகழாலும் என்ன பிரயோசனம்?

[தொடரும்.]

V. S. ராமஸ்வாமிசாஸ்திரி, B.A., B.L.,

யவனர்வரலாறு.

[யாழ்ப்பாணம் ஸ்ரீமான். ந. இராமநாதபிள்ளை, B.A., (LOND.) அவர்கள்.]

(உகஅ-ஆம் பக்கத் தொடர்ச்சி.)

பார்சியர்.

யவனருடைய சின்னாசியாக் குடியேற்றநாடுகளை லிடியநாட்டு வேந்தன் கிறீசஸ் என்பான் தன்னாட்சிக்கு உட்படுத்தினான். அக்காலத்தில் டைக்கிறீஸ்நதிக்கரையில் நிருமிக்கப்பட்ட நினிவாநகரில் அசிரிய வேந்தன் சேனாசெரிப்பு என்பான் யூதரைச் சிறையிட்டிருந்தான். அவனைச் சிதியர் வலிகுன்றச்செய்தனர். கி. மு. 625-ஆம் ஆண்டில் மீடர் பாபிலோனியர் என்னும் இருசாதியார் அசிரியருடைய தலைநகராகிய நினிவாநகரை நூறினர். அக்காலத்து அசிரியவேந்தன் சாடனாப்பாலன் என்பான் தன் மனைவிமக்களையும் ஆடையாபரணங்களையும் எரியிலிட்டு இறந்தானாம். பாபிலோனிய அரசன் நபுகத்நாசர் என்பான் எகிப்தையும் யூதநாட்டையும் கைப்பற்றினான். அவனுடைய அரசு நிலைகுலைந்தபின் கி. மு. 550ல் பார்சியர் தலையெடுத்துச் சைரஸ் என்பானை அரசனுக்கிச் சுவாதீனம் பெற்றனர். சைரஸ் என்பவனுடைய தாய் ஒரு மீட்டர்கோன் மகள். சைரஸ் மீட்டரையழிப்பானென ஒரு சாத்திரம் இருந்தது. ஆதலின் அவனை ஒரு இடையனிடம் கொடுத்தார்கள். சைரஸ் படைத்தொழிற்பயிற்சிபெற்றுப் பார்சியருக்குத் தலைவனானான்.

கிறீசஸ் பார்சியரோடும் ஸ்பாட்டரோடும் நட்புப்பூண்டான். காலிஸ்நதியைக் கடந்தால் கிறீசஸ் ஒரு இராச்சியத்தை அழிப்பானென டெல்பிக்கோயிலில் ஓர் உரை பிறந்தது. சைரஸ் கிறீசஸ் என்பவனை வென்றானாக, அவன் டெல்பிக்கோயிலிற் பிறந்த உரை பிழைபட்டதென்றான். அதற்கு விடையாகக் கோயிற்பூசாரி பின்வருமாறு கோயிலிற் பிறந்த வாக்கியத்தை விளக்கினான். அது, "இராச்சியத்தை அழிப்பான் என்பதின் கருத்தை நீ யுணர்ந்திலை; உனது இராச்சியத்தையழிப்பாய் என்றே நாம் கருதினேம்" என்பதே. இது நிற்க.

சைரஸ் கி. மு. 540ல் பாபிலோன்நகரை மோதிப் பின்னர்ச் சிதியரோடு போர்புரிந்து ஆண்டான். அவன் மகன் கம்பீசஸ்

பினீசியநாட்டையும் எகிப்துநாட்டையும் பார்சியருடைய ஆட்சிக்குட்படுத்தினான். அவன்மகன் டேறியஸ் கி. மு. 521ல் அரசுகட்டிலேறிச் சூசாநகரைத் தலைநகராக்கினான். தன் இராச்சியத்தை இருபது மாகாணமாகப் பிரித்துத் தேசாதிபதிகளையும் ஏற்படுத்தினான். பொன்நாணயங்களை வழங்கினான். இவன், இந்துநதி தொடக்கம் யவனகுடாநாடுவரையும் தன் ஆட்சியைச் செலுத்தியபொழுதிலும், சிதியரை வெல்லமுடியாதிருந்தான். தீவுகளில்வசித்த யவனர் பார்சியரைத் துரத்திச் சுவாதீனம்பெற எண்ணினர். அவர்கள், ஒருவன் தலையை மழித்து மறைக்கடிதம் வரைந்து எதீனியரிடம் துணைவேண்டுதற்கு அவனை அனுப்பினார்கள். பார்சியர் யவனருடைய கப்பல்களை கி. மு. 496ல் உடைத்தனர்; கி. மு. 492ல் பார்சியர் படையெடுத்து யவனதேசத்தில் இறங்கினர். பார்சியருடைய கப்பல்கள் (முந்நூறு) புயலில் அகப்பட்டு உடைந்தன; இருபதினாயிரம் படைவீரர் மாண்டனர்; எனினும் பார்சியர் எதீனியரிடம் திறைவேண்டித் தூது அனுப்பினர். எதீனியர் தூதனைக் கிடங்கிற்றள்ளினர். பார்சியர் வெகுண்டு 1,00000 வீரரை அறுநூறுகப்பல்களில் ஏற்றிக்கொண்டு ஏதென்ஸ்நகரை அழித்தற்குச் சென்றனர். எதீனியர் கலங்கிப் பீடிப்பிடிஸ் என்பவனை ஸ்பாட்டரிடம் துணைபெற்றுவரும்படி விரைந்தனுப்பினர். அவன் இரண்டு நாளில் 150மைல் ஓடினான். ஸ்பாட்டர் நிறையுவாமுன் தாங்கள் புறப்பட முடியாதென்று மறுமொழியளித்தனர். மரதன் களத்தில் 9000 எதீனியரும் 1000 திபரும் பெரியதோர் பார்சியப்படையைக் கொன்று குவித்தனராம். பார்சியருடைய நிலப்படை தோற்றபோதிலும் கடற்படை ஏதென்ஸ்நகரைத் தாக்கிற்று. மிலிற்றியாடிஸ் பார்சியரைப் பின்னருங் கலைத்தான். பார்சிய வேந்தன் டேரியஸ் இறந்தபின், சேர்ச்சிஸ் என்பான் போரைத் தொடர்ந்தான். மிலிற்றியாடிஸ் எகிப்தியரைப் பார்சியருக்கெதிராகத் தூண்டுதற்குச் சென்று, வழியில் பேரஸ் என்னும் தீவில் இறங்கினான். அத்தீவுக்கோயிலுள் ஆடவர் செல்லுதல் விலக்கப்பட்டிருந்ததாயினும், தேவராட்டியொருத்தியின் ஏவற்படி அவன் புகுந்தான். புகுந்தவன் மனம்நொந்து வீழ்ந்தான். அவன்துடையில் மரத்துண்டொன்று ஏறிற்று.

கி. மு. 481ல் பார்சியர் ஏதென்ஸ்நகரை யழித்தற்கென நாற்பத்தாறுதேசங்களிலிருந்து படைதொகுத்தனர். அவர்களுக்குத்

துணைப்படையாகப் பினீசியர் கொடுத்த கப்பல்கள் உடைந்தன. எனினும், பார்சியப்படையினர்யவனதேசத்தில் இறங்கினர். பகைவருடையதொகை ஐந்துகோடியென்பர்; அப்படை நீர்மொண்டதால் பல நதிகள் வற்றின என்பர். பார்சியருடைய பாசறை இருபத்தைந்துமைல்நீளமுடையதாயிருந்ததாம். யவனசாதியார் பலரும் எதீனியருக்கு உதவிபுரிந்தனர். எதீனியர் ஒற்றர்மூலம் பார்சியப்படையின் நோக்கங்களை அறிந்தனர். சேர்ச்சிஸ் ஒற்றரைப்பிடித்தும் கொல்லாதுவிட்டுவிட்டான். எதீனியர் டெல்பிக்கோயில்சென்று சாத்திரங்கேட்டு மரச்சுவர்களே காப்பாற்றுமென மறுமொழி பெற்றார்கள். ஸ்பாட்டரும் சாத்திரங்கேட்டு உங்கள் இணைவேந்தரில் ஒருவன் இறவாவிடில் தலைநகரழியும் என விடைபெற்றனர். தர்மப்பயிலாயி என்னும் வெந்நீர்க்குன்றின் அயலில் லியனிதாஸ் என்னும் வீரனும் முந்நூறு ஸ்பாட்டரும் தீபர் பாக்கியர் என்போரின் துணைப்படையினருமாகப் பத்தாயிரம்வீரர் பார்சியரை எதிர்த்துநின்றனர். அப்போர்க்களம் இரண்டுமைல் நீளமான பள்ளம். அப்படைக்கு 271 கப்பல்கள் துணையாகநின்றன. பார்சியருடையபடை சூரியனைமறைக்குந்தன்மையதென ஒருவன் சொல்ல வேந்தன் லியனிதாஸ் ‘அங்ஙனமாயின் நிழலிற் போர்செய்யலாம்’ என விடைகூறினனும்; அப்போரில் யவனவீரர்யாவரும் தொலைந்தனர்; 20000 பார்சியர் இறந்தனர். எதீனியர் சிலர் கோட்டையில் பெண்களையும் குழந்தைகளையும் விட்டுச்சென்றனர். சிலர் கப்பலேறிச் சென்றனர். பார்சியர் நகருக்குத் தீயிட்டனர். பார்சியக்கப்பல்கள் ஒடுங்கிய கடலில் அகப்பட்டு எதீனிபக்கப்பல்களால் உடைக்கப்பட்டன. அடுத்த ஆண்டும் பார்சியப்படைஞர் யவனதேசத்தில் இறங்கினர். அப்படையை ஸ்பாட்டர் அழித்தனர். ஸ்பாட்டருடைய வேந்தன் பார்சியரோடு நட்புக்கொள்ள எண்ணினனென எதீனியர் அஞ்சினர். தம் நகரைக் காத்தற்காக எதீனியர் மதில் கட்டினர். ஸ்பாட்டர் மதில் கட்டப்படாதெனக் கட்டளையிட்டனர். தமிஸ்தக்கிளிஸ் என்னும் எதீனியன் மதிலைக்கட்டும்படி எதீனியரை ஏவித் தான் ஸ்பாட்டா சென்று மதில்கட்டப்படவில்லையென ஸ்பாட்டரை ஏமாற்றி, அவர்கள் அதை நம்புமாறு தூதரையனுப்பியறியலாமென்றும் சாற்றி, ஸ்பாட்ட ஒற்றர் வந்தால் அவரைச் சிறையிடும்படி எதீனியரையும் ஏவி, இவ்விரகால் காவலரண்களையமைத்தனன்.

எதீனியர் மேன்மக்கட்கட்சி குடியரசுக்கட்சியென இருகட்சிய ராயினர். ஒருசாரார் ஸ்பாட்டரோடு பகை நன்றெனவும் ஒருசாரார் நட்பு நன்றெனவும் வாதித்தனர். ஸ்பாட்டர் எதீனியரை அழிக்க வெண்ணினர். ஸ்பாட்டர் புலம்பெயருமுன் ஸ்பாட்டாநாட்டிற் பூகம்பம் நிகழ்ந்தது. அடிமையொருவனைக் கோயிலிற் கொன்றதற் காகப் பசிடன் சினந்து பூகம்பத்தையுண்டாக்கினன் என ஒரு பழங்கதையுண்டு. இக்குழப்பக்காலத்தில் அடிமைகள் திரண் டெழுந்து சுவாதீனம்பெற எண்ணினர். ஸ்பாட்டர் அடிமைகளை ஒருவாறு அடக்கினர்.

எதென்ஸ்நகரில் பெரிக்கிளியன் சில சீர்திருத்தங்களைச் செய் தான். அக்காலத்து எதீனியரின் தொகை 500,000. அவருள் அக நகரில் வசிப்போர் 100,000 என்ப. எதீனியர் தீபரை அடக்கின ராக, கொறிந்தியர் ஸ்பாட்டரின் துணைபெற்று எதீனியரோடு போர்புரிய எழுந்தனர். தீபரும் பாக்கியரும் ஸ்பாட்டரோடு சேர்ந் தனர். தீவுகளிலுள்ள குறுநிலமன்னர் எதீனியருக்குத் துணைபுரிந் தனர். பெரிக்கிளியன் எதென்ஸ்நகரைக் காத்தான். ஸ்பாட்டர் வயல்களை அழித்தனர். நகரில் கொள்ளைநோய் பரம்பிற்று. கி. மு. 426ல் ஸ்பாட்டா பின்னரும் பூகம்பத்தால் இடருற்றது. ஸ்பாட்ட ருடைய கப்பல்களை எதீனியர் உடைத்தனர். அன்றியும், அடிமைக ளும் ஸ்பாட்டாவிற் கலகம் விளைத்தனர். பதினோராண்டு நிகழ்ந்த உண்ணாட்டுப்போரால் யவனர் கெட்டனர். 426ல் அல்சிபியாடிஸ் ஆர்க்கியரை அடக்கும்படி ஸ்பாட்டரைத் தூண்டினன். ஸ்பாட்டர் ஆர்க்கியரை வென்றனர். அல்சிபியாடிஸ் எதிர்த்தபோதிலும்,ஏனைய அமைச்சர்கள் ஸ்பாட்டரோடு போர்புரிய எண்ணினர். எதீனியர் ஸ்பாட்டருடைய குடியேற்றநகரமாகிய சிறுக்கூசாப்பட்டினத்தைப் பிடிக்கமுயன்றனர். அல்சிபியாடிஸ் நாடுகடத்தப்பட்டமையால் ஸ்பாட்டாநாடு சென்றிருந்தான்; பின்னர் எதீனியர் தாய்நாடு திரும் பும்படி அவனை அழைத்தனர். ஸ்பாட்டர் பார்சியரின் துணைபெற்று எதீனியரோடு போர்புரிந்தனர். 404ல் ஸ்பாட்டருடைய தலைவன் லிசாந்தர் என்பவன் எதென்ஸ்நகரை முற்றுகையிட்டான். ஸ்பாட் டர் நகருள் நுழைந்து சூறையாடி அரசியலைக்குழப்பிக் கொடுங் கோலைநாட்டி யேகினர்.

[தொடரும்.]

மதிப்புரை.

புலியூர்ப்புராணம்:—இது, தெல்லிப்பழை, வித்துவான் ஸ்ரீமத். சிவானந்தையரவர்களால், சிதம்பரதலத்தின் மகிமைகளைத் தொகுத்துத் தமிழில் இனிய செய்யுணடையில் இயற்றப்பெற்றது; அணி நயங்களும் பல பொருணயங்களும் வாய்ந்தது; ஆயிரத்திருநூற்றைந்துசெய்யுட்களடங்கியது. காந்தம், இலிங்கம், பவிடியோத்தரம் முதலிய வடமொழிப் புராணங்களிற்கூறப்பட்டுள்ள பல அரிய விஷயங்களைத்தொகுத்து, அவற்றை யாவரும் அறிந்துகொள்ளுமாறு தமிழ்ப்பாக்களால் இயற்றியுதவப்பெற்ற இப்புலியூர்ப்புராணத்தை யாவரும் பெற்றுப் படித்தற்கெளிதாக நன்கு பதிப்பித்த எழாலை, திரு. ஐ. பொன்னையபிள்ளையவர்கள் தமிழார்வம் பாராட்டத் தகும்.

திருச்செந்தூர்ப்பிள்ளைத்தமிழ் (உரையுடன்):—சேதுநாட்டுப் பகழிக்கூத்தர் என்னும் புலவரால் இயற்றப்பெற்ற சிறந்த பிரபந்தமாகிய இது, முன்பே சிலரால் மூலமாக அச்சிட்டு வெளியிடப் பெற்றிருப்பது பலரும் அறிந்ததே. இப்பொழுது புதுக்கோட்டை மஹாராஜா கல்லூரித் தமிழாசிரியர் பண்டித வித்வான். ஸ்ரீமத் நா. கனகராஜையரவர்கள் இதிற் பல திருத்தங்கள்செய்து, சிறந்தோருரையும் இயற்றி, அதனைப் புதுக்கோட்டை ஜனமித்திரன் பத்திராசிரியர் ஸ்ரீ. சுப்பிரமணிய ஐயரவர்களால் அச்சிட்டு வெளியிடச்செய்திருக்கின்றனர். தமிழ்கற்போர்க்குப் பயன்படுமாறு பொருளை நன்கு தெளிவுறுத்துவதாய் அழகுபெற அமைந்துள்ள இவ்வுரையையும், இப்பிள்ளைத்தமிழில் பொருட்பொருத்தமின்றிப் பிழைபட்டிருந்தவை பொருட்பொருத்தமுறத்தக்கவாறு பல திருத்தங்களையும் செய்து உதவிய கனகராஜையரவர்களும், இதனை இலவசவெளியீடாக அச்சிட்டுதவிய புதுக்கோட்டை 'ஜனமித்திரன்' பத்திராசிரியர் ஸ்ரீ. சுப்பிரமணிய ஐயரவர்களும் செய்துள்ள நன்றி தமிழகம் போற்றற்குரியது.

திருமுருகாற்றுப்படையாராய்ச்சியுரை:— இது, சங்கத்தொகை நூல்களிற் பத்துப்பாட்டுள் ஒன்றாகிய திருமுருகாற்றுப்படைக்கு உரையாகக் காரைநகர்ப் பண்டிதர் சு. அருளம்பலம் என்பவரால் நன்கு ஆராய்ந்து எழுதப்பெற்றது. இவ்வுரையாசிரியர் திருமுருகாற்றுப்படையடிகளைச் சில்சிலவாக எடுத்துக்கொண்டு அவற்றுக்குப் பொழிப்புரைவரைந்து, விசேடவுரையில் அருஞ்சொற்பொருள்களையும் இலக்கணமுடிபுகளையும் மற்றும் நுண்ணிய பல விஷயங்களையும் ஆராய்ந்து விளக்கியிருத்தலால், இவ்வுரை, திருமுருகாற்றுப்படையைக் கற்போர்க்கு அறிதற்பாலனவாய பலவிஷயங்கள் செறிந்து விளங்குகின்றது. இவ் ஆராய்ச்சியுரைப்பொருள், நக்கீரர் வரலாறு என்பது முதலாக அருஞ்சொற்பொருள் என்பது இறுதியாகவுள்ள பன்னிரண்டுபடியாகப் பகுத்துக்கொண்டு தெளிவான நடையில் அமைக்கப்பெற்றிருக்கிறது. நூற்றுமுப்பத்தாறுபக்கங்களில் அழகாகப் பதிக்கப்பெற்றுள்ள இப்புத்தகத்தின் விலை ரூ 1–0–0.

ஸ்ரீமங்களாம்பிகைமாலை:—இந்தப் பிரபந்தம், செங்கம் போர்டு ஹைஸ்கூல் தமிழாசிரியரான கருந்திட்டைக்குடி திரு. வி. சாமிநாத பிள்ளையவர்களால் கும்பகோணம் ஸ்ரீமங்களாம்பிகையம்மை விஷயமாக நூறுவிருத்தப்பாக்களால் இயற்றி அழகாக அச்சிடப்பெற்றுள்ளது. தெளிவும் பத்திச்சுவையும் எளிய இனிய நடையமும் தொடையமும் பொருந்தியது. வேண்டுவோர் பிள்ளையவர்களுக்கு எழுதிப் பெறலாம்.

கிறிஸ்த்வமும் தமிழும்:—இது, மயிலை. சீனி வேங்கடசாமி என்பவரால் எழுதப்பட்டது; மயிலாப்பூர். கா. ஏ. வள்ளிநாதன் என்பவரால் அச்சிட்டு வெளியிடப்பட்டது; பல அறிஞரளித்த முன்னுரைகளையுடையது; கிறிஸ்தவர்கள் தமிழ்மொழிக்குச் செய்த தொண்டுகள் பலவற்றை விளக்கி யெழுதப்பட்டது. இது, பல தமிழ்நூல்களையும் ஆங்கிலநூல்களையும் ஆராய்ந்து எழுதப்பட்டிருப்பதால் இதைப் படிப்போர்க்குப் பலநூல்களிற் காணும் விஷயங்கள் ஒருங்கே அறியலாகும். வேண்டுவோர், 'கா. ஏ. வள்ளிநாதன், 59. காரணீசுவரர்கோயில்தெரு, மயிலாப்பூர், சென்னை' என்ற விலாசதாரிடம் பெறலாம்.

ஸ்ரீ:

புல்லையந்தாதி.

[௧௭௬-ஆம் பக்கத் தொடர்ச்சி.]

செந்தமிழ்த்தொகுதி-34 பகுதி 5-ல் ௧௬௭ முதல் ௧௭௬ முடியவுள்ளபக்கங்களில் அப்போது கிடைத்தஅளவில் இந்நூற் செய்யுள்கள் வெளியிடப்பட்டன. இப்பால் சில வாரங்களுக்குமுன் யான் தஞ்சைக்குச் சென்றிருந்தபொழுது சரசுவதிமஹாலிலுள்ள ஏட்டுச்சுவடியிலிருந்தபடியே இந்நூலின் எஞ்சியபகுதியையும் எழுதி வந்ததைச் செந்தமிழ்நேயர்கள் படித்துமகிழுமாறு வெளியிடலானேன்.

இங்ஙனம்,

வித்வான். ரெ. இராமையங்கார்,

தலைமைத்தமிழாசிரியர்,

சௌராஷ்ட்ர ஹைஸ்கூல், மதுரை.

---

30 சொல்லுவதெல் லாமவத்தந் துறைமோச
நிறைகளில்லாத் தூர்த்த னாகி
அல்லல்வினைச் சரக்கெடுத்தே யொன்றுகோடி
யாகவளர்த் தேனெனையு மடிமைகொள்வாய்
....
....
....
நாயகனே புல்லைநகர்த் தூயவானே.

வேறு.

31 வானம் புவிகால் கனலுட னேரை
வகையால் வையத் துருவாகித்
தானம் புயனுர் விதியத னாலே
தளர்வா மல்லற் படுவேனே

யானந் தனிநா ளடியவ ராஞே
ரடியே னுள்ளத் தறிவாகு
மோனந் தருஞா னமுமுத வாதென்
முறையோ புல்லைக் கிறையோனே.

32 புல்லைக் கிறையோ னடிபணி யாதார்
புவிமேல் வெகுயோ னிகடோறும்
தொல்லைக் கடனேர் பிறவியில் வீழ்வார்
துயரான் மெலிவா ரவர்காணும்
அல்லைப் பகலே வர(வு)செய் மாலோ
னடியே தொழுவார் பரமாகு
மல்லைப் பெறுவார் புவிமே லிதமாய்
மதியே (மதிதா) மதியாதே.

33 மதியா தவனு திகளா கியகோள்
வனுவா னம்மைச் சருவாதே
யெதிகா லனுமோ டுவனே மலரோ
னினிமேல் மண்ணிற் படையானே
நிதிசே ரளகா புரிநேர் வளமே
நிறைசீர்ப் புல்லைப் பதிமாலே
கதியா மெனவே துதியாய் மதியே
கருதா யெண்ணிக் கருதாயே.

34 ....
....
....
....
....
....
....
....

35 எழுதா ரணியாய் பரிதேர் பணியா
டைகள்சேய் மல்லற் கெழிலானே ?
முழுமா மதிநேர் முகமா தர்கண்மா
முதல்சேர் செல்வத் தினராஞேர்
செழுமா மலர்மீ துறைவா ணிதம்வாழ்
திறமார் புல்லைப் பதியானைத்
தொழுமா தவர்பூ வடிமீ தினிலே
தொழவே மெய்யுற் றவர்தாமே.

36 மெய்யுற் பனமா கியமா தவனே
விரைசேர் புல்லைப் பதியானே
மையுற் றழகார் திருமே னியனே
வரதா வள்ளைக் குழையோனே
துய்யக் கமலா தனிநா யகனே
துளவார் மல்லுற் றிடுதோளா
கையுற் றிடுமா ழியனே சரணு
கதிநீ யல்லல் தவிராயே.

37 தவிரா வினையா லுழன்மா னிடரே
தரைமீ தையப் படுவானேன்
புவிரா சரையே கதியா மெனவே
புலையே செய்யத் துணிவானேன்
அவிரா தவனு ரளியா ளியரா
யழகார் புல்லைப் பதியாரா
இவிரா தனையே வெனுமால் சரணு
கெதியா லுய்யப் பெறுவீரே.

38 உய்யப் பெறவே புல்லைக் கதிபா
உனையே பணிவே னினிவேறிவ்
வையத் தினிலோர் தெய்வத் தினையான்
மதியான் மதியேன் மதியேனே

பையக் கிருபார் செல்வத் துரையே
பரமா வடியே னிடர்தீராய்
செய்யத் திருமான் மெய்யிற் புணரா
திபனே குருவே யருள்வாயே.

39 வாயே துதியாய் கரமே தொழுவாய்
மதியே மதியாய் புல்லாணித்
தாயே பதுமா தனியே யருள்வாய்
தயவா யிதுவே யல்லாமல்
பேயே மறுதே வர்களைத் திடவே
ப்ரமியா ததனின் மெய்யாக
நீயே திருமா மகள்பூ வடிமே
னினைவாய் நினைவே விள்ளாயே.

40 விள்ளத் தகுமே புல்லைப் பதிவாழ்
விரைசேர் பதுமா தனிசீர்மை
யெள்ளத் தனைதா னுள்ளத் தறிவா
ரெழில்சே ரடியா ருலகாள்வார்
வள்ளத் தினையே யிணையா வருசீர்
வளமா முலைமா மகள்சேவை
தெள்ளத் தெளிவார் செல்வத் தினையார்
தெரிவார் தெரியார் புவிமீதே.

வேறு.

41 புவியாகிக் கடலு மாகிப்
பூதரங் கனல்விண் காலாய்
விவிதமா மநந்த கோடி
விளங்குபல் லுயிர்க்கங் கங்காய்
நவில்சரா சரங்க டோறு
நடத்தியே கலந்து நிற்கு
மவிரொளி மணியைப் புல்லை
யாசினீ ழலிற்கண் டோமே.

42 கண்டபொன் வண்டு வண்டிற்
கால்கட லலைகாற் றூடி
வெண்டயிர் மத்து மின்னல்
வீசுபம் பரமிவ் வாறுய்ப்
பண்டையின் வினையாற் சுற்றும்
பலபல பிறவிக் காளாய்க்
கொண்டலை வீர்காள் புல்லைக்
கொண்டலைத் துதித்தி டீரே.

43 கொண்டலைத் திருப்புல் லாணிக்
குரிசிலை யாலின் மீதே
பண்டலை கடலிற் றூங்கும்
பரமனைக் கண்டு தாழ்ந்து
விண்டலை வண்ணற் றாய
விரைமலர் சொரிந்து போற்றக்
கண்டலை வாய்கை கோடி
கமலத்தோன் படைத்தி லானே.

44 படை(த்த)வா கனந்தேர் யானை
பரிசன நிதிமின் னார்கள்
கடைத்தலை வாசற் காப்பார்
கனகதண் டிகையி தெல்லாம்
புடைத்தலைத் துயிரைக் காலன்
பொரும்பொழு துதவா தொன்றுஞ்
சடைத்தலை யடைவீர் புல்லைத்
தாணுவை நினைத் திடீரே.

45 தாணுவே பரனே தர்ப்பைச்
சயனத்தாய் புயங்க் தானே
வேணுவே யூதுஞ் செல்வா
விமலனே கமலக் கண்ணா

காணுவே னல்லே னுன்னைக்
கருத்துறப் பணியே னுன்ற
னுணை மாயை போக்கி
யாளுநா ளெந்த நாளே.

46 எந்தநாண் முதலோ சென்ம
மெடுத்தநாள் கணக்குப் பார்க்கில்
அந்தமே தளவே தாரா
லறியலா மறிவாய் நீயே
இந்தநாட் பணிந்தே னுன்னை
யிசைபெறுந் திருப்புல் லாணி
வந்தநா யகனே சென்ம
வாரிதி கரைகண் டேனே.

47 கரைவுடன் றுதித்த பேர்கள்
கற்பகத் துறைவா ரையா
தரையினில் வலம்வந் தோர்கள்
சந்திரா தித்த ராவார்
விரைசெறி திருப்புல் லாணி
விமலரைப் பூசித் தன்பாய்த்
திரைகடற் படிந்தோர் சீர்மை
செப்பவொண் ணாது தானே.

48 செப்புவே னெனக்கு வேண்டுந்
திருவர மொன்றே தென்னில்
இப்புவி தன்னை வேண்டே
னினிப்பிறப் பதுவும் வேண்டேன்
துப்புறு கமலன் செய்யுந்
தொழிலையும் வேண்டேன் புல்லை
மைப்புயல் வண்ணு வென்றன்
மனத்தையென் செய்கு வாயே.

49 மனத்திலே கவடு மாய
வஞ்சகத் தொழிலு மாகித்
தனத்தையே விரும்பு மின்னார்
தனத்திலே யுழலீர் சேர்சொற்
பனத்திலே ....
பணவிடை நேரம் புல்லை
வனத்திலே கருத்தை வைத்தால்
மறுபிறப் பில்லைத் தானே.

50 இல்லைத்தா னென்ன சொல்லா
வினியத்தான் மணிப்பொற் கோயி(ற்)
புல்லைத்தா னீகர் பாதம்
போற்றத்தான் வாமே னளிற்
கல்லைத்தான் கொடுபார் சூழ்ந்த
கடலணை கோலிக் கையின்
வில்லைத்தான் வளைத்தி லங்கை
வேந்தனைச் சினந்த தேவே.

வேறு.

51 தேவ நாயகன் றிருமக ளையகன்
றினந்தின மடியார்கள்
பாவ நாசனன் புல்லையின் மருவிய
பழம்பொரு ளணைவோர்க்கும்
சீவ நாயகன் மரகத மலையெனத்
திருவர சடிநீழன்
மேவ நாதியை மதிக்கவுந் துதிக்கவும்
விரும்பவும் பெற்றேமே.

52 பெற்ற செல்வமும் பெருமையுந் திற(மை)யும்
பெருகிய பெருவாழ்வுங்
கற்ற கல்வியும் பொறுமையு ஞானமுங்
கருணையு மறிவாகு

மற்ற மாதவப் பயங்களு நயங்களு
மவுனமும் புல்லாணி
யுற்ற மால்பதம் பணிந்தவர்க் கலதுமற்
றொருவர்க்குங் கிடையாதே.

53 கிடைக்கு ளேகிடந் திருமவுங் கபமெலாங்
கிறுகிறென் றிழுத்தேநெஞ்
சடைக்கும் போதெமன் வந்திழுக் கவுமுயி
ரங்கிங்கா மனையாட்டி
துடைக்கு ளேதலை மயங்குமன்றே புல்லைத்
தூயநின் னடிகாட்டிக்
கடைக்கண் பார்த்தெனை யாளவு மக்கணங்
கலுழனில் வருவாயே.

54 வாயுஞ் சிந்தையும் போய்ப்பிர பஞ்சத்தை
மறந்துட றெரியாமல்
பாயும் வெங்கரு மயிடத்தி லெமன்வரும்
பவனியைப் பாராமுன்
நீயுங் கஞ்சமின் னுளும்வெங் கலுழனி
னிமிடத்தி லெதிர்தோன்றித்
தாயுந் தந்தையும் போலருள் வாய்புல்லை
தனில்வரும் பெருமானே.

55 மானை நேர்விழி மனைவிய ரழுவது
மைந்தர்கள் கடனுத்தி
யேனையா சொலு மெனவுமங் கேமறுத்
தியம்பவுந் தெரியாமற்
பூனை போனிலம் புரண்டுமெய்ம் மறந்துமைம்
பொறிகளுங் கலங்காமுன்
கோனை யெம்பெரு மானைநம் புல்லையிற்
குரிசிலைத் துதிப்பீரே.

[தொடரும்.]

ஸ்ரீ:

சந்திரகுப்தன்.

முன்னுரை.

மாந்தர்வாழ்வு மனநிலைகளின் உயர்படிகளில் தவழ்ந்தேறி நிலையற்ற செல்வங்களில் நசைவிட்டு என்றுமழியா ஈசனடிப்படுதவில் உயர்வதேயாம் என்பது ஆன்றோர் துணிபு. அந்நெறிக்கு இடையூறுசெய்யத்தக்கனபோல் தோன்றும் அகநிலைகளையும் புறப்பொருள்களையும் அல்வழிமாற்றி நல்வழிப்படுத்த வேத முதலாகவுள்ள நூல்கள் வழிகாட்டிகளாகின்றன. அவ்வழிகளின் முயல்வார்க்கு அல்வழிப்பட்டோர் அடைந்தனவும் அடையநினைப்பனவுமாகக் காணப்படும் உலகச்செல்வங்களைக்காட்டிலும் பன்மடங்கு அதிகமான செல்வங்கள் எங்கும் என்றும் எய்துமென்பது அந்நூல்களில் காணலாம். ஒருமனிதன் உலகத்தில் தன்னை ஆராய்ந்துணராமல் மற்றை உலகப்பொருள்களைமட்டும் ஆராய்ந்துணர்தல் அவமேயென்பது அறிஞரெவரும் ஒப்பமுடிந்தது. இத்தன்னுணர்வை முற்றுவித்துச் சில வைராக்கியங்களால் யோகத்தின்படிகளிலேறி ஞானத்தின் எல்லைகண்டார், இகபரசுகங்களையடைதற்குத் தருமத்தின் வழுவாமல் நடக்க நமக்கு இட்ட வழிகளே நன்மார்க்கங்களாகும். தற்கால நாகரிகர்க்கு இன்னும் இவை அறியக்கிடக்கின்றன. இவைகளைத் திருத்தவென்று முயலுவோர் அவற்றின் சிறப்பறியாராவர். அவ்வாறியன்ற அரிய பெரிய இந்நாட்டு நாகரிக இயக்கங்களின் ஒரு சிறு காட்சியாக இந்த நாடகம் வரையப்பெற்றுளது.

இதைநோக்கும் பெரியோர் பிழைபல பொதிந்த இதன்கண் மேற்கூறியதை வற்புறுத்த ஏதேனும் ஒரு சிறுபகுதி இருப்பின் அதை ஏற்றுப் பிறவற்றைப் பொருட்படுத்தார்கள் என்பது எனது துணிவு.

N. R. கிருஷ்ணஸ்வாமி B.A., B.L.
அட்வகேட், மதுரை.

ஸ்ரீ:

நாடகபாத்திரங்கள்.

அலக்ஷயேந்திரன்	மேல்நாட்டுச்சக்கிரவர்த்தி.
நந்தன்	மகததேசத்தரசன்.
புருஷோத்தமன்	பஞ்சாபகதேசத்தரசன்.
சத்துருஜித்	புருஷோத்தமன்சேனுபதி.
சந்திரன்	நந்தன் காமக்கிழத்தியின்புதல்வன்.
அதிஜயன்	நந்தன் பட்டமஹிஷியின்புதல்வன்.
சாகரன்	சந்திரனின் உயிர்நண்பன்.
சுலோசனை	சாகரன் தங்கை.
யமுனை	சந்திரனுடைய செவிலித்தாய்.
தர்மசீலன், நிர்மலகுப்தன்	மகதநாட்டுப்பிரபுக்கள்.
சாணக்கியன்	சந்திரன் முதலியோர்க்கு ஆசிரியர்.
விகலன்	சுலோசனை ஆண்வேடம் பூண்டிருந்த காலத்துக் கொண்டிருந்த பெயர்.
சித்திராங்கி	பஞ்சாபகதேசத்தரசனுன புருஷோத்தமன் புதல்வி.

சேனுபதிகள், தூதர்கள், சேவகர்கள், திருடர்கள், அந்தணர்கள், வீரர்கள் முதலியோர்.

இடம்:—மகதநாட்டின் தலைநகராகிய பாடலீபுதனமும், பஞ்சாபகதேசத்தின் தலைநகராகிய தக்ஷாலயமும், பிறவும்.

ஸ்ரீ:

சந்திரகுப்தன்.

அங்கம்-I.

களம்-1.

[பாத்திரங்கள்:—சூத்திரதாரன், நடி, அதிஜயன், சந்திரன்.]

நடி:—[வணங்கிநிற்க.]

சூத்திரதாரன்:—மங்களங்களெல்லாம் உனக்கு உண்டாகுக.

நடி:—ஐயா! அடியேனை அழைத்தது எதுபற்றியோ?

சூத்திர:—[சபையைக்காட்டி] பெண்மணி! இச்சபையைப் பார்.

நடி:—[பலதரம் நோக்கி] நோக்குந்தோறும் என்மனம் குழைகிறது; செல்வம் கல்வி சீலம் கோலங்களில் மிகுந்த ஆடவரும் நங்கையரும் அளவிறந்தோர் திரண்ட இச்சபைக்கு நிகர் எச்சபையைக் கூறுவேன்.

சூத்திர:—உன் கண்கள் பூஞ்சோலையில் திகைத்தாடும் வண்டுகள்போல எங்கு நிலைபெறுவதென்றறியாமல் மயங்குவதே அதற்குச் சான்று.

நடி:—இத்தகைய சபையின்கண் ஏழையேனை அழைத்தது எதன்பொருட்டோ?

சூத்திர:—இச்சபையோர் மனங்குளிர ஒரு பாட்டுப் பாட வேண்டும்.

நடி:—பேதைமையுடைய பெண்ணாகிய என்வாக்கிற் பல சொற்சோர்வு பொருட்சோர்வுகள் இருக்குமே. இச்சபையோர்க்கு அது ஏற்குமா?

சூத்திர:—நீ பேதையென்றே அவர்கள் மன்னித்துக் களிகூருவார்கள்.

நடி:—

நல்லறங் காத்துத் தீமை நலிவுறச் செகுத்து மாந்தர்க்
கில்லறத் துதவி யேனை நிலைகளிற் சிறப்பு முற்றிப்
பல்லர சுருவ மாகிப் படிபுரந் தளிக்கும் பெற்றிச்
சொல்லுயர் சுருதித் தேவத் தூயவன் சரணம் சேர்வாம்.

சூத்திர:—இப்பாடல் யாரியற்றியது? அரசையும் தெய்வத்தையும் துதிக்கும் ஒரு பாடலாயிருக்கிறதே?

நடி:— இது, கூட்டூர்க் கருந்தேவரென்னும் என்னன்பரொருவர் இயற்றியது.

சூத்திர:—அங்ஙனமாயிற் சரி. இச்சபையோரை மகிழ்விக்க நாம் என்ன செய்யலாம்?

நடி:—என்னன்பர் எழுதிய நாடகமும் ஒன்றுளது.

சூத்திர:—அப்படியானல் அதை நடித்துக்காட்டுவோம்.

நடி:—அதை நடிக்கலாம்; ஆனல் முத்தமிழ்க் கல்வியின் முற்றிய இச்சபையோருக்குப் பிழைபலபொதிந்த என் நடிப்பு இனிக்குமோ? என்ற கவலையும், நீங்கள் பணித்ததைச் செய்யவேண்டுமென்ற ஆவலும் [ஒரு மான் நுழைய அதன் இருபுறங்களிலிருந்து அதிஜயனும் சந்திரனும் அம்பெய்கிறார்கள்; மான் ஓடிவருகிறது.] அதிஜயன் அம்பும் சந்திரன் வாளியும் அம்மானை வருத்துவதுபோல் என் மனத்தை வருத்துகின்றனவே.

அதிஜயன்:—அரசிளங்குமரர் விளையாடும் வனத்தில் யாரடா வேடப்பயல்?

சந்திரன்:—யான் வேடனல்லேன்; ஒரு நாடன்தான். இப்பொழுது நாமிருவரும் காடராதலின், யான் நூறுதண்டதூரம் தூரத்தி யெய்யும் இம்மானின்மேல் நீ எங்ஙனம் வாளிதூவத் துணிந்தனை?

அதிஜயன்:—என்னெதிர்ப்படும் மானை யான் அடிக்கத்தான் அடிப்பேன்.

சந்திரன்:—அக்குற்றத்திற்காக யான் உன்மேல் வாளிதொடுப்பேன்.

[இருவரும் பொருதல்.]

சந்திரன்:—(அதிஜயனை வீழ்த்திவிட்டு நெருங்கி உற்றுநோக்கி) ஆ! ஆ! நம் சக்காவர்த்தியின் குமாரரல்லரோ? அப்பொழுதே அரசிளங்குமாரென்றனரே! மானத்தூரத்திவந்தவேகத்திலும், அவர் அம்பாலடித்த கோபத்திலும், அது தப்பியோடின துயரத்திலும் அவருரைத்தது என்மனதிற் பதியாதுபோயிற்றே. பெரும் பாவத்திற்கும் அவதூறுக்கும் ஆளானேனே. நம் அரசருக்கு ஒரே புதல்வராகிய இவரைக் கொன்ற பாவத்துக்கு ஆளாவேனே? [கிட்டிப்போய்த் தொட்டுப்பார்த்து] இன்னும் உயிர் இருக்கிறது. இவர் இறப்பின் இவ்வம்பே நம்மைக் காட்டிக்கொடுத்துவிடும். அதைப் பிடுங்கியெடுப்பின் உதிரவாரி பெருகி உடனே இவர் உயிர்மாய்வர். பல்கோடி பிரஜைகளில் ஒருவனாகிய யான் இறப்பினும், அரசர்மரபை அழித்தல்கூடாது. என் மனமறிய அப்பாபத்துக்கு ஆளாகேன். [உள்ளே குதிரைச்சத்தம்] ஏதோ குதிரைச்சத்தம் கேட்கிறது. நாம் ஓடியொளித்தலே உத்தமம். [பதறிக்கொண்டுசெல்லுதல்.]

அங்கம்-1.

களம்-2.

நந்தன் கொலுவிருக்கை.

[பாத்திரங்கள்:—அமைச்சர், சேனாபதிகள், சேவகர்.]

சேவகன்:—[தொழுது] அரசே அங்கதேசத்தரசர் ஐந்து கோடிபொன்னோடு அடிவணங்கக் காத்திருக்கிறார்.

நந்தன்:—வரவிடு.

அங்கன்:—[வந்து வணங்கிக் காணிக்கைவைத்து,] கப்பம் கடைவாயிலி லிருக்கின்றது.

நந்தன்:—[ஓர் அமைச்சனை நோக்கி] அங்கர்திறையை அரும் பொருட்சாலையிற் சேர்த்து அவருக்கு அநங்கவிலாசத்தில் விடுதி யமைக்க. [அங்கனைநோக்கி] அங்கரே! உம் நாடு வளமிகுந்து வாழ்வுடையதாயிருக்கிறதா? செங்கோன்மாறாது பரிபாலிக்கப் பெறுகிறதா? பசுக்கள் பாலை மிகுத்துச்சொரிகின்றனவா? பிரஜை கள் புருஷாயுசு உயிர்வாழ்கிறார்களா? நாற்பாற்குலத்தாரும் தத்தந் தொழிலைப் பிறழாது செய்துவருகிறார்களா? மாதம் மும்மாரி பெய்கிறதா? அந்தணரை அன்புடன் ஆதரிக்கின்றீரா?

அங்கன்:—மீனினம் மிளிரும் வானிடையொளிரும் முழுமதி யென எம்போன்ற சிற்றரசர் புடைசூழ விளங்கும் புண்ணியனே! மதியின் ஆழிக்குள்ள கறையுமின்றிச் சக்கரநடாத்தும் சத்திய னே! கரையற்ற செல்வக்கடலே! கடலின்விரிந்த மனத்தனே!

நின், கழற்படு முடியெக் காவலர் நாடோ
அழற்படு தீமைக் கணுகிட மாகும்!
எம், செங்கோற் சீர்த்தி செல்வநின் பணியை
மங்கா தாற்றும் மரபின தன்றோ!
மனுமுறை தவறா மாண்பினவன்றோ
வினைசெயற் குர்தும் வீரநின் பணிதாம்!
வேத மோதும் வேதியர் குரலாற்
காத நின்றே கடுவினை யகலும்!
வேள்வியின் முற்றி விரிகடற் கல்விக்
கேள்வியர் பல்லோர் கெழுமுநா டினதே!
அறத்திற னோம்பி மறத்திறன் செகுக்கும்
திறத்துறை தேர்ந்த தேவனீ யன்றோ!
பீடார் செல்வத் தேந்தல் நின்னாட்டில்
கேடா தெய்தும் நிதிக்குவை யெல்லாம்!
கங்கையின் நன்னீர் பொங்கிவந் தெய்த
மங்கள மகிழ்ச்சி மலியுநின் னாட்டே!
ஆவிளங் கன்றுக ளகந்தொறுந் துள்ளும்;
தூவி யன்னம் துறைதொறும் உலவும்;
அந்தணர் மறவர் வணிகரே முதலோர்
தந்தொழின் மாறாத் தகைமையிற் சீர்த்தார்;

வளமிகும் வயலில்; மறுகிடை வணிகம்;
கலைபல தெருவிற் கதமமர்க் களத்தே;
வாரிநீர் வற்றிச் சோரினும் கொண்மூ
மாரிநீர் மாரு மாண்புடைத் தன்கண்;
கோயிலிற் பரவும் குலக்கட வுளினும்
வாயில்வந் தெய்தும் வறிஞரே மேலென்
ருயினும் மிக்க அளியின ராகிப்
போயவர் இன்னல் போக்குவர் மனையோர்;
அந்தண ரோம்ப லறங்களிற் சேர்த்தென்
றெந்தைநின் ஞட்டில் எளியரும் தொடர்வர்;
கோவியற் றருமம் கோடாச் செங்கோல்
ஓவியத் தருவநின் னுள்ளக மறிக்தெம்
ஆவியிற் பெரிதா யறத்திற னுற்றன்
மேவினம் யாமே; வாழ்கநின் ஆழி!

நந்தன்:—அங்கரே! உம்முடைய இனிமையான மொழிகள் என் மனத்தை மிகவும் மகிழ்விக்கின்றன. இடனறிந்துதவிக் கடனறிந் திறுக்கும் உம்போன்றவருதவியுடைய எனக்கும் என் நாட்டுக்கும் சிறிதும் குறையுண்டோ? [சேவகன் வணங்கிநிற்க] சேவகா! என்ன விசேஷம்?

சேவகன்:—அரசே! யாரோ அயல்நாட்டுவேந்தன்றூதராம். வாயிலிற் காத்திருக்கிறுர்கள்.

நந்தன்:—உள்ளே வரட்டும்.

[அலக்ஷ்யேந்திரன்தூதர்கள் உள்ளேவருதல்.]

தூதர்தலைவன்:—'வெற்றிவேந்தே வாழ்கநின் ஆழி'

நந்தன்:—தூதரே! உம்மை வரவிடுத்தவர் யாவர்? நீர் வந்த காரியமென்ன?

தூ-த:—காலையிற் கீழ்த்திசைக்கடலின் இருளைத் தொலைத்துப் பகலின் குருத்துச்சிறிதுசிறிதாய் மேலெழ அகன்றவானிற் கார்மேகமெங்கும் செக்கர்வீசி உலகெங்கும்பரந்த இருட்பகைவன் முதுகுகாட்டியோட மேலெழுந்த பனிப்பகை பருகி, இரவில்

இருட்பகைவன் கொடுங்கோலின்கீழ்த் துன்புற்றுவருந்திய தன் அருமைக்குடிகளை முழுதும் காண ஆவலுற்றான்போல் வான்வழியே தன் ஆழியைச் செலுத்திநடந்து, பகைவன் தீச்செயல்களைப் பளிச்செனவிளக்கிக்காட்டி, அன்புடனெழுந்து தன்னை ஆதரித்து நல்வரவுகூறும் அளவிறந்த மக்களைத் தன் ஆயிரம் கரத்தாலும் தைவந்து மாலையில் மேற்றிசைக்கடலிற் பொதிந்த தன் பாசறை யடையும் பரிதிக்கெதிராய்,

‘மேற்றிசைக் கடலில் மிகைபட விளங்கும்
ஒலிம்பஸ் மலையில் நலம்பெற வசிக்கும்
ஜ்யூபிட ரென்னும் வியாபகத் தெய்வம்
அலக்ஷயேந் திரப்பே ரரசரிற் சிங்கமாய்ப்
பாரசீகப் பகையறத் தொலைத்து
நாகரிகமெனும் நல்விளக் கெடுத்துக்
கீர்த்திச் செக்கர் கெழுமிமுன் செல்ல
ஆர்த்தெ ழுந்துபல் லரசரை யடக்கிப்
பொய்ம்மலி தெய்வம் போற்றலின் மயங்கி
நைவுறு மாந்தர் நலனடைந் துய்யப்
பூமியின் மேற்றன் புரவியை நடத்தித்
தீமைசே ராட்சித் திறனறத் துணித்துத்
தன்வலி தெரிந்து சரணடை மாந்தர்க்
கின்ன லெய்தா திமையெனக் காத்துப்
படியினிற் பாதி கடிதினில் வென்றுபின்
இடியொலி மாறா விமய மெய்திப்
பஞ்ச நதிக்கிறை தஞ்சா ணடையநின்
மேற்றிசை யெல்லையில் மிகுமிளைப் பாறி
வீற்றி ருக்குமவ் வேற்றிளஞ் சிங்கம்
மாகத நின்னை மாய்கத னாக்கிப்
பரமன் வலியும் சிரமமிக் கெய்தச்
சீனன் குழுவை வானக மேற்றிச்
சப்பன நாட்டுக் கப்புறக் கடலில்
ஓங்கி நின்றவத் தாங்கருஞ் சீர்த்திக்
குன்றிடை யெய்துங் குறிப்பின னாகித்
தன்றுணை வீரர் சவிப்பிலர் முந்த

அந்தரத்தார்த் தெழுங்கொடுங்கன் மாரிதடுப்
பதற்கதனை யனிச்சப் போதிற்
சுந்தரத்தோள் கொடுசுமந்து கவிகையெனக்
கவித்ததற்கென் சொல்லு வேனே. (கஉ)

1926 இக்கணைத்த சதுமுகத்தோ னினைத்தெருள்வா
னெண்ணிறந்த சிருரை யன்றி
மெய்க்கணத்தின் கன்று குணி ரும்பொடுதீங்
குழல்கொம்பு மிசைகொண் டேக
வக்கணத்துற் றெவ்வுழியு மவ்வவைவாயின்
படிவமதா யமைந்த வாய்மை
முக்கணத்தன் முதலாய கடவுளர்க்குங்
குழைவளிக்கு முதன்மைத் தாமே. (கங)

வேறு.

1927 பைத்துச் சுரித்துத் தசைவறண்ட
படிவத் துலகைப் பருகவிடம்
பொய்த்துச் சுரந்தன் றிரங்கலகை
பொம்மன் முலைக்கண் டிருப்பவளம்
வைத்துச் சிறுபா லிகைகுவித்து
மழலை நுனிநா வருடவுயிர்
துய்த்துத் தவழ்ந்து புடைபெயர்ந்த
துணிவு மெளிய துணிவொன்றே. (கச)

1928 கள்வாய் சுரந்த மலர்ப்பிணையற்
கடுங்கோற் கஞ்சன் கரந்துவிடும்
புள்வாய் பிளந்து சகடுதைத்துப்
புணர்மா மருதி னிடைதவழ்ந்து
வள்வார் முரசின் கணங்கறங்கும்
வாயிற் களிற்றின் மருப்பிடந்து
கொள்வான் றுணிந்து மல்லருயிர்
கொல்வான் றுணிந்த தற்புதமே. (கரு)

வேறு.

1929 கோதுபடர்ந் தெழுந்தருணக் கூற்ருய
நூற்றுவருட் கொடியோன் முன்னர்
வாதுபடர்ந் துறங்கூதி னுடிழந்து
காடுறைந்த மாண்சே ரைவர்
தூதுபடர்ந் ததுமல்லா லுரை[1]பொறித்த
மடக்கோலை சுமப்ப தந்தோ
காதுபடர்ந் தெழுந்தநறுந் துணர்க்குஞ்சித்
திருமுடியோ சாற்று வாயே. (கூசு)

1930 தெகிலகலாக் கழிமடஞ்செற் றெண்புலன்வந்
தடைந்ததவ சிந்தை யோர்முன்
முகிலகலா [2]தனைவிஞ்சித் திருநகர்க்கண்
ணூற்றுவர்க்கு முன்னோன் பற்றுந்
துகிலகலா வகையளித்தை வருந்துதிக்கத்
தக்கவருந் துதியன் னுடன்
னகிலகலா நறுங்குழலை முடித்திடப்பா
ரதமுடிப்ப தயர்ப்பார் யாரே. (கூஎ)

1931 *பொருள்கோடித் தெழுபடிவத் திரணியற்கு
மழுவிடையோன் பொருட்டிற் பொன்று
வொருகோடி யிருகோடி யரைக்கோடி
வாழ்நாள்பெற் [3]றுயர்ந்த கார்க்கு
மருள்கோடித் தெழுந்தசிசு பாலனுக்கும்
வீடளிப்பான் மாயா வுள்ளத்
தருள்கோடி யென்றுலிங் குனைத்தொழுவார்
பெறுங்கதிகட் கையம் யாதே. (கூஅ)

வேறு

1932 எடார்முண் டகத்தயனுங் கயிலை யானு
மெவ்வுயிர்க்கும் பிறப்பிறப்பே யிழைத்தெஞ் ஞான்றுங்
கோடாகின் றனரதற்கோர் களைகண் ணுகிக்
குவலயம்பா வையும்விழுங்கிக் கொண்ட நீரில்

[பி-ம்.] 1 பொய்த்த. சா. 2 தனவிஞ்சித். சா. 3 றுலந்து ளாற்கு. மா.

வீடாதன் றகத்திட்ட நினதுருவைப் புறத்திட்டு
வேறோர் தெய்வ
நாடாகின் றனரன்றோ செய்ந்நன்றி கொன்றாரே
நரகத் தாரே. (௬௬)

வேறு.

1933 செகத்தா ருயிர்கள் வெருக்கொளவே
செருக்குங் கனக னுரம்பிளந்த
நகத்தா மரையு முலகளந்த
நகத்தா மரையு நகையரும்பு
முகத்தா மரையுந் திருவுந்தி
முகத்தா மரையு [1]மூதுணர்வோர்
அகத்தா மரையு மலர்ந்தடியே
னகத்து மலர்ந்த தற்புதமே. (௧00)

1934 மடந்தை யெனப்பாற் கடற்பிறந்த
மணியும் புடவி மரகதமு
மிடங்கொண் மணிமார் பினும்புயத்து
மெறிப்ப மறைநூற் கோப்புண்டு
படர்ந்த புகழ்வா னவர்மருங்கு
பணிநா யகமாய்ப் பகிரண்டங்
கடந்த வடத்தி னிடைக்கிடக்குங்
கருமா மணியென் கண்மணியே. (௧0௧)

1935 சேலிற் பிணையிற் கொடுங்கணையிற்
செவ்வேள் பிடித்த கொழுங்குருதி
வேலிற் சிறந்த விழிமடவார்
விடஞ்சேர் காமக் கனியையுமுட்
கோலிக் குழைவுற் [2]றருந்துதற்குக்
கொதிப்பா ரமிர்தங் குதித்ததிரைப்
பாலிற் கிடந்த கனியினைக்கண்
களிக்கக் களிக்கப் பருகாரே. (௧0௨)

[பி-ம்.] [1] மூதுணர்ந்தோர். ச. [2] றழுந்துதற்குக். சா.

1936 ஓத உணர்தற் கரிதாகி
யுலப்பில் பனுவற் றொகைக்கரசாய்
நாத மயமாய்ச் சுடர்மயமா
ஞான கரமா மொருநாலு
வேத மதிக்கும் விதிமதிக்கு
மீச்சென் றெழுந்து கொழுந்துவிடும்
போத மயமா கியகருணைப்
புனிதா சரண கதியென்றான். (கOரு)

1937 வேத மொழிக்கு முதலாய
விண்ணோர் பெருமான் புகழ்பாப்புங்
கீத நடையின் புறப்பாடிக்
கிளர்மே ருவைவந் தடைந்தவருட்
போதந் திகழு நாரதனும்
பொறையோன் மறையோர் குலத்துதித்த
காதற் சிறுவ னருந்தவத்தின்
கருமந் துணிவா னெதிர்ந்தனனே. (கOச)

1938 உதிர்ந்த சருகு நுகர்வனவிட்
டுதை யுணவா யுறுதவமே
முதிர்ந்த படிமத் துயர்பொறிவாய்
முன்னும் புலனைந் தையுமவித்தோ
னதிர்ந்த தரங்கக் கடற்புவனத்
தழியாப் புவன மளிப்பதற்கென்
றெதிர்ந்த முனிவன் றனைவணங்கி
யெந்தாய் சரண கதியென்றான். (கOரு)

1939 எவனை நினைந்து தவப்பொருட்டா
லெய்தக் குறித்த பயனெனத்தக்
கவனை முனிவன் வினவுதலுந்
தொடர்ந்த பிறவித் தொடரறுத்த

தவநா கரிக மடைந்தோனே
சதிரா யமரர் பதிபுரக்கு
மவனு தியரா மெண்மருக்கு
மரசா யிருக்கு முயர்வென்றான். (க0சு)

1940 ஊக்க முடையா யுறுபயனீ
யுறுதற் குறுதிப் [1]படவளிப்பான்
நோக்குங் கடவு ளினையெனக்கு
நுவல்வா யெனப்பல் லுலகமுமுண்
டாக்குந் திறமு மாக்கியதை
யழிக்குந் திறமு மழியாமற்
காக்குந் திறமுந் தொடங்கியமுக்
கடவு ளரையுங் குறித்தென்றான். (க0எ)

1941 நாவற் கனிபோ னிறத்தோய்
நாரா யணனே யனைத்துயிர்க்குங்
காவற் கடவு ளெனவுணர்ந்துங்
காதற் றிறமொன் றறியாத
வேவற் கடவு ளரையவனோ
டிணையா மூவ ரெனக்குறித்த
பாவத் தொழிலாற் புரிவனேயாம்
படிவம் பெறுதி யெனச்சபித்தான். (க0அ)

1942 யாண்டு மிடும்பைத் திறம்விளைக்கு
மெல்லாப் பிறவி யினும்பிறந்து
மாண்டு தெருளா வறம்புரந்த
மக்கட் பிறவி நிலையாகிக்
கூண்டும் பருகின் றிறைஞ்சுயர்பு
குறித்தேன் குறித்த குறிப்பிகழ்ந்து
மீண்டும் பிறவிக் கடற்படுகர்
வீழ்த்தா யிதுவோ விதியெனவே. (க0கூ)

[பி-ம்.] [1] படியளிப்பான். சா.

1943 சங்கா யிரஞ்சூழ் வலம்புரிக
டாமா யிரஞ்சூழ் சலஞ்சலமாய்ப்
பொங்கார் கலியுட் பிறந்தவற்றூற்
பொதியும் பொலிவுற் றுறைதருநா
ளெங்கோ மானுங் கடவுளரு
மிவைபோன் றிருப்ப [1]ரெனுமுணர்வுற்
றங்கா தரவி னவனழியாப்
பதமே வுதியென் றருள்புரிந்தான். (கக0)

இரண்டுந் தொடர்.

1944 சீதக் கடலே துறமுணர்வின்
[2]றிறத்தா லடியேன் றிருமால்பொற்
பாதக் கமலம் பணிந்தழியாப்
பதவி பெறுதற் குறுவதெவண்
போதக் கடலே யுரையெனத்தென்
புலத்தண் பொருநைத் துறைமுடிவிற்
காதக் கடற்குண் டகழினிலக்
கரைக்கோ சனைமேற் றிசைசென்றால். (ககக)

1945 குருகா புரியென் றொருநகரெங்
கோமான் வைகுந் தலமுரைத்த
திருமா நதித்தென் கரைக்கணித்தாய்ச்
சிறந்த நதிவா னவர் வழுத்துங்
கருமா மணிவான் [3]புலவிரசைக்
கவினைத் துளதா யிடைக்கமலப்
பெருமா னிருந்தெம் பெருமானைப்
போராச் சிறப்பிற் றொழுமன்னே. (ககஉ)

1946 வானே ருடன்மற் றேனேரு
மதிக்கும் படிநீ மறிதிரைநீர்
ஆனு தொலிக்குங் கடனீங்கி
யடைந்தே மும்மை யுகக்கடையிற்

[பி-ம்.] [1] ரெனவுணர்வுற். சா. [2] திருத்தா. ச. [3] புனல்விரசைக். சா.

கானர் துளபன் பதம்புகுமக்
கதிக்கா யிரத்தான் டலமருநாட்
டான தாவுற் றெருதுறைசங்
கணிதண் டுறையென் றுரைபெறுமால். (ககங)

1947 ஆதித் திருமா நகரினுள்வா
மாதித் திருமா லருணிலையாற்
பேதித் துலகிற் பொலிந்துநின்ற
பெருமா னெனப்பேர் சிறந்துனக்கு
நீதித் தமர்க்கும் பரந்தாம
நிறைவாழ் வளிக்கு மெனமுனிவன்
போதித் ததற்கோ ரிடருறுகிற்
புனிதா வெனையு நினையென்றான். (ககச)

நாலுந் தொடர்.

1948 செங்கட் கருமா முகிற்கடிமை
திருத்திக் குலிசன் றுயரகற்றித்
துங்கப் புகழ்நா ரதன்வடபொற்
சுரும்பின் முனிவர் குழாத்தடைய
வங்கத் தொகைசேர் கருங்கடலா
மகரக் கிடங்கின் மதிபுரைவெண்
சங்கக் குலத்துக் கரசாகிச்
சாபந் தவறு துதித்தனனே. (ககரு)

வேறு.

1949 செக்கர்வான் மதியுடுத் திரளி னார்கலி
புக்கதா மெனத்துகிர் பொதுளு நீள்கொடிப்
பக்கமே சுலாயவெண் பணிலப் பத்தியுள்
மிக்கவால் வளைக்கிறை விழைவின் வைகுநாள். (ககசு)

1950 மறந்தவா மயர்வினை மாசில் காட்சியாற்
றுறந்தநா ரதன்முனஞ் சொன்ன நுண்புனற்
பிறந்ததா னேமியான் பெருமை தேர்ந்துலா
யறந்தவா நதிமுக மதனைச் சார்ந்தவே. (௬௧௭)

இரண்டுந் தொடர்.

1951 உறைபடு புயல்கிழித் துடுவொ டும்பர்வான்
நிறைமதி [1]குடதிசைச் சென்ற நீர்மைபோற்
றுறைகெழு நதிமுகத் துவாரத் தூடுசூற்
பொறைவலம் புரியிடம் புரியப் போதரா. (௧௧௮)

1952 சிறந்துளார் துறந்தநாட் டமர்பின் செல்லமுன்
துறந்துளா ரெதிர்வதைப் பொருவுந் தொல்லைநீர்ப்
பிறந்தவால் வளைகள்பின் செல்ல மாநதிக்
கறங்குவால் வளையெதிர் செல்லுங் காட்சியே. (௧௧௯)

இரண்டுந் தொடர்.

1953 படியினை யளந்ததாட் பரனை யுற்றவென்
றடியினின் முடியைவைத் தாற்றுள் வால்வளை
நெடிதினிற் கிடப்பமுந் நீருள் வால்வளை
முடியுறத் தவழ்ந்தன முழுது மென்பவே. (௧௨0)

1954 போந்தவால் வளையருட் போத மேதகு
தாந்தன்வாழ் வடைந்தநற் றுனங் கண்ணுறீஇ
வாய்ந்ததுத் தரமென மனக்கொண் டந்தணீர்
சேர்ந்தவண் களிப்பினல் வலஞ்செய் செம்மற்றே. (௧௨௧)

1955 காலையா ழிசைமுரல் சுரும்புண் காமர்பூ
மாலைமா நதிநன்னீ ராட்ட வாழ்வுறீஇ
வேலைவா யுவருறு மேனித் தென்றுபூஞ்
சோலையா னதுநறை சொரிந்திட் டாட்டுமே. (௧௨௨)

1956 காட்டில்வாழ் கபிலையுங் கவரி மாவுநீர்
வேட்டுவான் பொருநைநீ ருண்டு மீண்டுகன்
[2]றாட்டவாய் வழிந்தபால் வெள்ளத் துள்ளுவந்
தாட்டவே யாடிவீழ்ந் துராய தன்பினே. (௧௨௩)

[பி-ம்.] [1] குடதிசைச் சேற னீர்மைபோற். சா. [2] றாட்டுவாய். சா.

வேறு.

1957 குருகா புரியீங் கிதுவெனவே
குறித்துக் குளிர்தண் டுறைபடிந்து
முருகார் பொழிற்றென் கரைமணைந்து
மூவர் முதல்வன் திருவடிகட்
குருகா முரன்று யிரம்வலஞ்செய்
துள்ளு முனம்பூ மகட்கினிமை
தருகா தலனின் றுதயமுறுந்
தான மொருமூன் [1]றெதிர்ந்தனவே. (கஉச)

1958 தேன்று தளைந்த பசுந்துளபத்
திருமால் பெருமா தவத்துயர்ந்த
வான்றும் பதுமக் கனைகழற்றுண்
மாயோன் மறைபுக் குறைதான
மூன்று யதனுற் றனக்கழியா
முத்தி தர[2]முந் துறந்தானந்
தோன்று நிலைமை துணிவதற்காய்த்
துறவோன் றனையுள் ளியதன்றே. (கஉரு)

1959 சிந்தித் ததனைத் தனதுளத்துஞ்
சிந்தித் துயர்நா ரதனுடனே
வந்தித் தலநீ யடைந்ததற்பின்
மயர்வே தெனநுண் மதியுடையோய்
உந்திக் கமலத் தயன்றனைமுன்
னுதவும் பெருமா னெமக்கெளிதாய்ச்
சந்திக் கழியாப் பதமளிக்குந்
தான மிவற்று ளெவனென்றான். (கஉசு)

[பி-ம்.] [1] றெதிர்ந்ததுவே. சா. [2] முந் துறுதானந். சா.

வேறு.

1960 ஏனமாய் வியனில மிடந்த காரயன்
ஞானவா ரிதிபுகா நயந்த தாமது
மானதப் புளியதாய் வருமை வாய்ப்பணித்
தானமீ துதவுன்னுற் றழைக்குந் தானமே. (கஉஎ)

1961 என்றுதான் மயர்வற வியம்பி யுள்ளமீ
தொன்றிய வையமு மொழிந்த காலையில்
நன்றிசேர் சங்கனும் [1]வேண்ட நாரதன்
றன்றுதா ளிணைமுடி சூட்டி யேகினன். (கஉஅ)

வேறு.

1962 அன்று தான்மெருடுத் தின்றுகா தீங்கட லாழி
வென்றி மாயனை வலஞ்செயத் தொடங்கின விதிநாட்
சென்று தேய்ந்தன விருமதி யகத்தினித் திருமா
னன்றி யுய்த்திட வேவரு மதன்றிற நவிலின். (கஉகூ)

1963 அற்றை நாளயன் றன்னொடு மடைகுவம் யாமும்
இற்றை நாடொடுத் தனைவரு மிருத்திரீங் கென்ன
நற்ற வம்பயில் வசிட்டனே குதனுநன் குணர்ந்தோய்
மற்றை மாதவ ரனைவருந் துயிலவண் வளர்ந்தார். (கநிo)

1964 கண்ணு நெஞ்சமுங் களிதரக் கண்கணீர் வார
வுண்ண யங்கெழு முவகையி னுரோமமுஞ் சிலிர்ப்ப
வெண்ணை யிற்குழைந் தெம்பிரா னெதிர்தலும் விழித்தார்
அண்ண லங்கதி ரவன்குண திசைக்கிரி யடைந்தான். ()

வேறு.

1965 ஆன்றவெண் மதியா னுண்ணா
லரும்பத நடுநின் றோர்கட்
டோன்றிய மதிக்கெஞ் ஞான்றுந்
தோன்றியுந் தோன்றுவாறே

[பி-ம்.] [1] காட. சா.

போன்றமற் றவைதாஞ் சான்றோர்
புலனெனுஞ் சுடர்க்குத் தோற்றஞ்
சான்றபோற் [1]றுளக்கஞ் சான்ற
தரணியாற் றாணிச் செல்வம். (கசுஉ)

1966 செஞ்சுடர்க் கவனி நீதிற்
செறியிருண் மறலி சூழ்ச்சிக்
கஞ்சியு நரகின் றீமை
யறிந்தும்வன் படிறு சாரா
நெஞ்சினர் வாய்மை முன்னர்
நெறியுறா வலந்த பொய்மை
யெஞ்சிய தெவ்வா றவ்வா
றிடருறீஇ யிரிந்த மாதோ. (கசுகூ)

1967 மண்ணின்மா மடந்தை தேசு
மழுங்கமங் கலத்தை யானென்
கண்ணினாற் காண்க லேனென்
றமலையாங் கமலை மாடத்
துண்ணிலா விதழ்க்க பாட
மொருங்கடைத் தனளென் றுள்ளா
வண்ணலார் விடுத்த சோதி
யாழியொத் தனன்வெய் யோனே. (கசுச)

1968 அருணெறி தழைந்த சாந்தி
யடைந்தமெய்த் தவத்தோர் வாய்மைப்
பொருணெறி நயந்த தாந்தன்
[2]புலத்தொடு வசிட்டன் கூறத்
தெருணெறி புரிந்த யாவுஞ்
சிந்தையுற் றனராய் முத்தி
தருநெறி சிறப்ப வாடித்
தவறிலா மதியி னோடும். (கசுரு)

[பி-ம்.] [1] றுலக்கஞ். சா. [2] புலத்தொடும். சா.

1969 மாங்கனி கரும்பில் வைத்த
வடிபிழி யெனும்ப லாவின்
தீங்கனி யமிர்தந் தன்னைத்
திரட்டிவைத் தனைய வாழைப்
பூங்கனி யளிந்து வீழ்ந்த
போதினிற் புதிதுண் டுள்ளந்
தாங்கனிந் தளிய மாயோன்
றனைநினைந் துறைய மாதோ. (கசுசு)

1970 நீலமால் வரையே போன்றோர்
நிமிங்கில நெடுநீர்க் குய்த்த
பாலமா மெனவே திக்கிற்
[1]படர்ந்துவான் பணில மெய்துங்
காலமே கருதிச் [2]செந்தீ
கான்றகட் பகுவாயோடு
ஞாலமா தரிக்குஞ் செவ்வி
நதிமுகங் குறுகிற் றன்றே. (கசுஎ)

1971 உருகெழு புவன மூன்று
முறினுமுள் ளடக்கும் பேழ்வாய்ப்
பொருகடற் புனலை மாந்தப்
புனலொடுஞ் சடாரம் புக்க
செருமிகு திறந்து மாயாத்
திமிமுத லியவாம் யாவும்
பருவர லுறுமை யீதோர்
பரவையென் றுறைவ தொன்றே. (கசுஅ)

1972 இரும்புறஞ் சுழன்ற நீத்த
வீட்டமு முதரத் துள்ளாய்ப்
பொரும்புனற் பெருக்கு நாப்பண்
புணர்விலாப் புடையின் பொற்பும்

[பி-ம்.] [1] படர்ந்த. ச. [2] செந்திக். சா.

பெரும்புறக் கடலு மண்டப்
பித்தியுந் தான மேழாய்
வரும்பல விதத்தி னுன்ற
வாரியும் போன்று தோன்றும். (கருகூ)

1973 கைவலந் தரித்த வெல்போர்க்
கணிச்சியான் களத்து ணஞ்சிற்
பொய்வலந் தவர்தம் முள்ளம்
புதையிருட் பிழம்பிற் றேய்த்த
மைவலந் தழையு நீல
வரையினைப் புரையு மாகஞ்
சைவலந் தழைந்து பச்சைச்
சயிலமும் பொருவு மன்றே. (கச0)

1974 வான்புறத் தணவு மொல்லென்
மறிதிரை யீட்டம் பெய்து
நோன்புறத் தெக்கல் வாய்ந்த
நுண்மண லமுவத் தாங்கண்
கான்புறம் பொதிவெண் டோட்டுக்
கைதையுங் கஞலிக் காமர்
தேன்புறம் பொதிந்த தண்பூஞ்
செருந்திலுந் தழைந்த மன்னோ. (கசக)

1975 மாயையால் விரிந்த பூத
வகையெல்லா மறித்து மீன்ற
மாயையா லொடுக்கு விப்பான்
மலருளான் மதியுறீஇயம்
மாயையா னதனைத் தோலா
வலியொடும் வடிவுய்த் தேவு
மாயையா மன்றி வேறோர்
வடிவிதா மென்ப தன்றே. (கசஉ)

1976 கோதிலா மறைமெய்ஞ் ஞானக்
கொழுந்தினு லறிஞ ராய்ந்த
வாதிசால் பிரம வாழ்வு
மலகிலா வணுவின் வாழ்வு
நீதிசா லுபய மாகி
நிகழும்வாழ் வையுமொன் றென்றே
சாதியா மருவார் தற்க
மெனவடற் கரிய தம்மா. (கசங)

1977 பண்டுபோற் றுகிரு முத்தும்
படுகடற் படுகர் நீங்கித்
தண்டுழாய் முதல்வன் முத்தி
தருவதிங் கெமக்கின் றென்னுத்
தொண்டுபூண் மனத்தி னுைத்
தொகுதிகூர் தமர்தற் சூழ
வெண்டிசா முகமு மேத்து
மெழினகர்க் கெய்துங் காலை. (கசச)

1978 ஆற்றல்சா லதனைக் கண்டே
யகிலமன் னுயிரை யுண்ணுங்
கூற்றின துயிரை யுண்பான்
பிறிதொரு கூற்றுண் டாய
தோற்றமா மெனவே யஞ்சித்
துயருழந் தந்தோ வந்தோ
மாற்றமொன் றிலையா மென்று
மம்மர்கூர்ந் தழுங்கிற் றன்றே. (கசரு)

1979 வெண்டிரைக் கிடங்கிற் சங்கம்
விண்ணவர் பெருமான் றனந்
தொண்டினல் வலஞ்செ யாது
துயருற வொருமீன் றெல்லோன்

பண்டுதான் கொண்ட மீனின்
படிவம்போற் பகுவா யார
வொண்டிறற் கொடிய மீனி
னுருவினை விழுங்கி யாங்கே. (கசசு)

1980 மேருமால் [1]வரைதா னீல
வெற்பினை விழுங்கி வேலை
யூருமா றதுபோன் றுல்லை
யூர்ந்தவ னொழிந்த பின்றைப்
பாருமந் தரத்து ளாரும்
பைம்பொனு லயமாம் வானு
ளாருமா தரவு கூர்வா
னணிநகர் புகுந்த தன்றே. (கசஎ)

இரண்டுந் தொடர்.

வேறு.

1981 தாதார்ந்த நறுங்கமலத் தவளமலர்த்
தவிசிருந்த சகல தேவர்
மாதாவைத் துணைவியெனத் திருநாவி
லமைத்துயர்ந்த வாழ்வு கூரு
மூதாதை யெனப்புவன மனைத்தினையும்
படைத்துமறை முழுதுந் தோய்ந்த
வேதாவு [2]மவ்வுழிவந் தரிகரியென்
றுரைமுழக்க மிருந்த தோர்பால். (கசஅ)

1982 பாமமே கலைபயின்ற மருங்குமையாள்
குடிபுகுந்த பயல்சே ராகத்
தாமமா மதிப்பிளவும் பொன்றுணர்க்கொன்
றையுஞ்செருகுஞ் சடிலத் தானும்

[பி-ம்.] [1] வரைதான் மேரு. சா. [2] மவ்வழிவந். சா.

நாமவேற் படைக்குகனும் பிணர்த்தடக்கைக்
கரிமுகனும் நாரணனுசிர்
வாமனா கேசவா மாதவா
வெனவழுத்தும் வாய்மைத் தோர்பால் (கசகக)

வேறு.

1983 காசிபன் பிருகு தக்கன் காமர்நா ரதன்வ சிட்டன்
மாசறு [1]கிரது வண்மைப் புலகனத் திரிம ரீசி
தேசுடை யங்கி ராவென் றறுதெசப் பிரமர் வாய்மை
யாசிகள் பலவுங் கூறி யரிகரி யென்ப தோர்சார். (கரு0)

1984 பெரிதுணர் சோதி காமன் பீவான் பிருதுப் பார்மேற்
சரிதனக் கொருவ ரில்லாச் சயித்திராக் கினியே மும்மை
யெரிவளர் வனக னற்கா ரியனெனு மிருடி மார்க
ளரிகரி யெனநின் றேத்து மரவமே மிகுந்த தோர்பால். ()

வேறு.

1985 கண்ணகன்ற திரைத்திருப்பாற் கடலமுதை
யுருப்பசிசெங் கனிவா யீன்ற
தண்ணமுதத் துடன்பருகிப் பெருகியெழுங்
களியினெடுந் தறுகட் டெவ்வர்
புண்ணுமிழ்வெங் கறைமருப்பிற் பகட்டயிரா
வதப்பிடர்வின் புரந்து ளானும்
விண்ணவரும் விரைவினில்வந் தரிகரியென்
றுரையரவ மிகுந்த தோர்பால். (கருஉ)

வேறு.

1986 தரனல னனிலன் சோமன் றவலருந் துருப னுபன்
வானுடைப் பிரத்தி யூடன் மாண்பிர பாத னென்னு
முானுடைவசுக்களெண்மருபயகைத்தலங்கள்[2]சேர்த்த
சிரனுடை யவரா யேத்துந் திருத்தகு முழக்க மோர்சார்.()

[பி-ம்.] [1] கிருது. ச. [2] சேர்த்திச். சா.